இலக்கு
வாராந்த மின்னிதழ்
GLOBAL TAMIL MEDIA CENTER
இதழ் 381
சனி, 07 மார்ச், 2026 |
பக்கங்கள் 18
www.ilakku.org



# இந்தியப் பெருங்கடலில் மூண்ட போர்

## ஈரானிய போர்க்கப்பல் தகர்ப்பும் இலங்கையின் இராஜதந்திர நெருக்கடியும்

விதுரன்

## மார்ச் 8 சர்வதேச மகளிர் நாள் நல்வாழ்த்துக்கள்




பெண்களின் துணிவு– ஒரு சமூகத்தின் எதிர்காலம்.

## கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் இருப்பு கேள்விக்குறி!



மட்டுநகரான்



# சீனாவுக்கு எதிரான மேற்கத்திய முக்கிய கூட்டாளியாக இந்தியா மாறும்

குணா கவியழகன்

# எந்த ஒரு நாட்டுக்கும் சார்பாக இலங்கையை பயன்படுத்த அனுமதிக்கப் போவதில்லை : அரசாங்கம் அறிவிப்பு



எந்தவொரு நாட்டுக்கும் சார்பாகவோ அல்லது மற்றொருவருக்கு தீங்கு விளைவிப்பதற்காகவோ எமது நிலத்தையோ, ஆகாயத்தையோ அல்லது நீரையும் பயன்படுத்த நாம் அனுமதிக்கப் போவதில்லை என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றம் நேற்று (06) சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தலைமையில் கூடிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். "எமது அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபோது அவர்கள் என்ன சொன்னார்கள்? இவர்களுக்கு சர்வதேச உறவுகள் இல்லை, ஒரு பெட்டிக்கடையைக் கூட நடத்தத் தெரியாது என்று சொன்னார்கள். நான் இதை அடிக்கடி சொல்கிறேன், சர்வதேச நாணய நிதியமும் நாட்டை விட்டு வெளியேறும் என்று கூறினார்கள்.

எமது ஜனாதிபதியின் இராஜதந்திரத்தை தாங்கிக்கொள்ள முடியவில்லை. சர்வதேச சமூகம் எமது ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தின் மீது வைத்துள்ள நம்பிக்கையை இப்போது அவர்களால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை" என்று நீதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஈரானுக்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான மோதல் முழு உலகையும் பாதிக்கும் ஒன்று என்பது தெரியும். அதேபோல், எந்த நாட்டில் எங்கு போர் நடந்தாலும் பாதிப்பு மனித உயிர்களுக்குத்தான். அதனால்தான் வெளிவிவகார அமைச்சரும் ஜனாதிபதியும் கூடிய விரைவில் அமைதியை ஏற்படுத்துமாறு கோரிக்கை விடுக்கின்றனர் என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

சிறிய நாடாக இருந்தாலும், இலங்கை அரசாங்கத்தின் தன்னம்பிக்கையும் மனச்சாட்சியும் மிகப்பெரியது.

தொடர்ச்சி: பக்கம் 16

## பொது அவசரநிலை பிரேரணை பெரும்பான்மை வாக்கால் நிறைவேற்றம்



பிரகடனப்படுத்தப்பட்ட பொது அவசரநிலையைமேலும்ஒருமாதத்திற்கு நீட்டிக்க நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை 100 பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதன்படி, பிரேரணைக்கு ஆதரவாக 108 வாக்குகளும் எதிராக 08 வாக்குகளும் மட்டுமே கிடைத்தன.

பொது பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 81 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் உள்ள பிரேரணை 100 பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டதாக சபாநாயகர் டாக்டர் ஜகத் விக்ரமநாயக்க நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இதற்கிடையில், அத்தியாவசிய பொது சேவைகள் சட்டத்தின் கீழ் பிரேரணை முறையாக நிறைவேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகம் தனது மக்களுக்கு விசேட அறிவித்தல்



இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகம் தனது மக்களுக்கு விசேட அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் நடவடிக்கைகள் வழமை போன்று முன்னெடுக்கப்பட்ட போதிலும், மத்திய கிழக்கு வான்பரப்பு மூடப்பட்டுள்ளதன் காரணமாக உலகளாவிய விமானப் போக்குவரத்து இன்னும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், மத்திய கிழக்கு ஊடாகச் செல்லாத சில வர்த்தக விமான சேவைகளைப் பயன்படுத்த முடியும் எனவும், விமானத் தாமதங்கள் அல்லது இரத்துச் செய்தல்கள்

தொடர்ச்சி: பக்கம் 16

# ஈரானுக்கு எதிரான போரை தோல்வியடையச் செய்வோம் - ரஷ்யா

ஈரானுக்கு எதிரான நடவடிக்கையை சாத்தியமற்றதாக்க நாங்கள் அனைத்தையும் செய்வோம் "ஈரான் எங்கள் நெருங்கிய நண்பர். அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பால் பாதிக்கப்படுபவர்கள் அனைவரும் எங்கள் மூலோபாய பங்காளிகள், அவர்களுடன் நாங்கள் உரையாடலைப் பேணுகிறோம். ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் மற்றும் பொதுச் சபை உட்பட சர்வதேச சமூகத்தின் மற்ற அமைதியான உறுப்பினர்களுடன் ஒத்துழைக்க எங்களால் முடிந்த அனைத்தையும் செய்வோம், அத்தகைய நடவடிக்கையை முற்றிலும் சாத்தியமற்றதாக்கும் சூழ்நிலையை உருவாக்குவோம்" என்று ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் லாவ்ரோவ் தெரிவித்துள்ளார்.



ஈரானுக்கு எதிரான நடவடிக்கையின் இலக்குகளில் ஒன்று மத்திய கிழக்கு நாடுகளிடையே முரண்பாடுகளை விதைப்பதாகும். "ஈரானுக்கு எதிரான இஸ்ரேலிய மற்றும் அமெரிக்க ஆக்கிரமிப்பின் விளைவாக மத்திய கிழக்கில் தற்போது என்ன நடக்கிறது என்பது உலகளவில், உலகளாவிய ஸ்திரத்தன்மை மற்றும் உலகப் பொருளாதாரத்திற்கு மிகப்பெரிய எதிர்மறையான விளைவுகளின் அபாயத்தைக் கொண்டுள்ளது" ஈரானுக்கு எதிரான நடவடிக்கையின் உண்மையான இலக்குகள் குறித்து அமெரிக்காவிற்குள் சர்ச்சைகள் உள்ளன என்றும் அவர் கூறினார்.

"பிராந்தியத்தின் நாடுகளிடையே - பாரசீக வளைகுடா நாடுகளுக்கு இடையே, ஈரான் மற்றும்

தொடர்ச்சி: பக்கம் 17

## ஈரான் போர் 100 நாட்கள் நீடிக்கும் - அமெரிக்கா



ஈரானில் போர் செப்டம்பர் வரை நீடிக்கும், ஈரானுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு குறைந்தபட்சம் 100 நாட்களுக்கு, ஒருவேளை செப்டம்பர் வரை ஆதரவளிக்க அமெரிக்க மத்திய கட்டளை பென்டகனில் இருந்து கூடுதல் இராணுவ புலனாய்வுப் பணியாளர்களைக் கோரியுள்ளது என்று அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட பொலிட்டிகோ என்ற ஊடகம் தெரிவித்துள்ளது.

இது மத்திய கிழக்கில் அமெரிக்க நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் புளோரிடாவின் டம்பாவில் உள்ள கட்டளைத் தலைமையகத்திற்கு கூடுதல் புலனாய்வுப் பணியாளர்களை அனுப்புவதை உள்ளடக்கியது. ஈரானுக்கு எதிரான போர் தொடர்பாக உளவுத்துறைப் பணியாளர்களை விரிவுபடுத்துவதற்கான நிர்வாகத்தின் முதல் கோரிக்கை இதுவாகும், இது ஆரம்பத்தில் டிரம்ப் அறிவித்த நான்கு வார காலக்கெடுவை

தொடர்ச்சி: பக்கம் 17

## ஐரோப்பிய ஒன்றியத்துக்கு எரிவாயு விநியோகிக்கத்தை நிறுத்த பூட்டீன் முடிவு



ஐரோப்பிய ஒன்றியம் தனது இறக்குமதியைத் தடை செய்யும் வரை காத்திருக்காமல், ரஷ்யா ஐரோப்பிய எரிவாயு சந்தையில் இருந்து விலகி, அதன் விநியோகங்களை வேறு இடத்திற்கு திருப்பிவிடலாம் என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் பூட்டின் கூறியுள்ளார்.

கிரெம்ளினில் ஹங்கேரிய வெளியுறவு அமைச்சர் பீட்டர் சிஜ்ஜார்டோவை வரவேற்ற பின்னர் புதன்கிழமை(4) ஜனாதிபதி இந்தக் கருத்துக்களை தெரிவித்தார்.

"இங்கே எந்த அரசியல் நோக்கமும் இல்லை. ஆனால் ஒரு மாதம் அல்லது இரண்டு மாதங்களில் நாம் மூடப் போகிறோம் என்றால், இப்போது நிறுத்திவிட்டு நம்பகமான கூட்டாளிகளான நாடுகளுக்குச் சென்று, அங்கு தொடர்ச்சி: பக்கம் 17

## மெழுகுதிரியில் வாழ்நாளைக் கழிக்கும் கியூப மக்கள்



அமெரிக்காவின் அழுத்தத்தால் மோசமடைந்த எரிபொருள் பற்றாக்குறையுடன் போராடி வரும் தீவைத் தாக்கும் தொடர்ச்சியான மின் தடைகளில் கியூபாவில் மில்லியன் கணக்கான மக்கள் மின்சாரம் இல்லாமல் தவித்துவருகின்றனர்.

நாட்டின் முக்கிய மின் உற்பத்தி

தொடர்ச்சி: பக்கம் 16

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினரின் வலி – எப்போது புரியும்?

### ரவிகரன் நா.உ கேள்வி



மத்திய கிழக்கின் அதிர்வுகளுக்கே அவசர நிலை தேடும் இலங்கை அரசாங்கத்துக்கு, கடந்த ஒன்பது ஆண்டுகளாக இந்த நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கில் தமது உறவுகளைக் தேடி தொடர் போராட்டத்தில் ஈடுபடும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் வலிகள் எப்போது விளங்கும் என பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை (6) நடைபெற்ற அவசரகால சட்டம் அமுலாக்கம் நீட்டிப்பு தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ச்சி: பக்கம் 12

## ஈரானுக்கு எதிரான ஆக்கிரமிப்பை நிறுத்து! கவனயீர்ப்பு போராட்டம்



சர்வதேச ரீதியில் ஈரானுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் அழுத்தங்கள் மற்றும் போர் அச்சுறுத்தல்களைக் கண்டித்து, கொழும்பு தேவட்டகா பள்ளிவாசலுக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

'பாலஸ்தீனத்தின் நண்பர்கள்' (Friends of Free Palestine) அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில், கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், இலங்கைக்கான ஈரானிய தூதுவர் மற்றும் பெருந்திரளான பொது மக்கள் கலந்துகொண்டனர்.

## மத்திய கிழக்கு போர்: பக்கச்சார்பில்லை – ஜனாதிபதி



மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் போர்க் கால சூழலில் அரசாங்கம் மத்தியஸ்தமான நிலைப்பாட்டை பின்பற்றுவதாக ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பிலேயே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மனிதாபிமானத்தை முன்னிலைப்படுத்தி, மனித உயிர்களை பாதுகாத்துக்கொண்டு பக்கச்சார்பின்றி செயற்படுவதே எம்முடைய நிலைப்பாடாகவுள்ளது என்று ஜனாதிபதி கூறியுள்ளார்.


"இந்த அவசர நிலைமையை கருத்திற்கொண்டு பக்கசார்பாக நாம் செயற்பட மாட்டோம். ஈரான் கப்பல் விவகாரத்திலும் மத்தியஸ்தமாக செயற்படுவதாகவும் அதேபோல் மனிதாபிமான செயற்பாடுகளில் இருந்தும் பின் வாங்க போவதில்லை" என்றும் ஜனாதிபதி மேலும் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பலினால் ஈரானியப் போர்க்கப்பல் ஒன்று மூழ்கடிக்கப்பட்டு, அதில் இருந்த 80-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்த நிலையில், இலங்கைக் கடற்பரப்பிற்கு மிக அருகில் தரித்திருந்த இரண்டாவது ஈரானியக் கப்பலை அவசரமாக கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிட அனுமதி கோரப்பட்டது.

இந்தக்கோரிக்கையை ஏற்றே இலங்கை அரசாங்கம் அந்தக் கப்பலை திருகோணமலை துறைமுகத்துக்குள் அனுமதித்துள்

தொடர்ச்சி: பக்கம் 12

## சில நாடுகள் மத்தியஸ்த முயற்சிகளை தொடங்கியுள்ளன – ஈரான்



சில நாடுகள் மத்தியஸ்த முயற்சிகளைத் தொடங்கியுள்ளன என ஈரான் தெரிவித்துள்ளது. மேலும் "நீடித்த அமைதியை" நிலைநாட்டத் தயாராக இருப்பதாகவும் ஆனால் "உரிமைகளைப் பாது காக்கத் தயங்கமாட்டேன். சில நாடுகள் மத்தியஸ்த முயற்சிகளைத் தொடங்கியுள்ளன. எங்கள் பதில் தெளிவாக உள்ளது. பிராந்தியத்தில் நீடித்த அமைதிக்கு நாங்கள் உறுதிபூண்டுள்ளோம், ஆனால் எங்கள் நாட்டின் கண்ணியத்தையும் உரிமைகளையும் பாதுகாப்பதில் எங்களுக்கு எந்தத் தயக்கமும் இல்லை" என்று ஈரானிய அதிபர் மசூத் பெசெஷ்கியன் சமூக ஊடகத்தில் பதிவிட்டுள்ளார்.

ஈரானின் அரபு அண்டை நாடுகள், அமெரிக்க இராணுவ தளங்களை குறிவைத்து நடத்தப்பட்ட ஈரானின் ஏவுகணை தாக்குதல்கள் மற்றும் தங்களது நாடுகளில் உள்ள பொதுமக்கள் மற்றும் எரிசக்தி கட்டமைப்புகள் மீது நடந்த தாக்குதல்களுக்கு எப்படி பதிலளிப்பது என்று பரிசீலித்து வரும் நிலையில், பெசெஷ்கியன் இந்த கருத்துக்களை தெரிவித்துள்ளார்.

## ஆசிரியர் தலையங்கம் | 07 மார்ச், 2026

## ஈரான் மேலான இஸ்ரேல் - அமெரிக்க கூட்டுத் தாக்குதலின் விளைவுகளை ஈழத்தமிழர் எவ்வாறு எதிர்கொள்வது

ஈரான் மீதான இஸ்ரேல் அமெரிக்க கூட்டுத் தாக்குதல் என்பது ஈழத்தமிழர்கள் மேல் 2009 இல் சிறிலங்காவும் அதன் கூட்டு நாடுகளும் கையாண்ட அதே உத்திகளையே கையாளுகின்றன. அந்த உத்தியை விளங்கிக் கொள்ளுவது அவசியம். முதலில் மக்களின் இறைமையைப் பாதுகாக்கும் வலிமையைப் படைபலம் கொண்டு இன அழிப்புப் போக்கிலான இனங்காணக் கூடிய அச்சத்தை உருவாக்கி ஒடுக்குவதுடன் அவர்களுடைய தேசத்தின் உட்கட்டுமானங்களை இயன்றளவு அழித்து அவர்கள் மீண்டும் போராட்ட சக்தியாக கட்டமையாதவாறு செய்வது.

அடுத்து எந்த மக்களின் இறைமையை ஒடுக்கினார்களோ அதே மக்களிடையே அவர்களைத் தாங்கள் விடுவித்துவிட்டதாக உலகிற்குக்காட்டக் கூடிய முறையில் அவர்களிடை இருந்தே தமக்கு முகவர்களாக விளங்கக்கூடியவர்களை இறைமையுள்ள ஆட்சியாளர்களாகச் செயற்கையாக உருவாக்குவது. அந்த ஆட்சியில் மக்களின் இறைமையைத் தேசியத்தை ஒடுக்கி நாட்டின் மூலவளங்களையும் மனிதவலுவையும் மக்களின் மூலதனங்களையும் தங்களின் உள்ளூர் முகவர்களும் தாங்களும் தங்களுடைய விருப்பப்படி பயன்படுத்துவது.

இந்த நிலையில் இன்று தொடர்கின்ற ஈரான் மேலான இஸ்ரேல் அமெரிக்கக் கூட்டு தாக்குதலின் விளைவுகளை எவ்வாறு ஈழத்தமிழர்கள் எதிர்கொள்வது என்பது இன்றுள்ள முக்கிய கேள்வியாக உள்ளதென இலக்குக் கருதுகிறது. இந்த எண்ணம் இந்தப்போர் நீடிக்கும் என்கிற விளக்கத்தை இந்திய என்.டி.டி.வி தொலைக்காட்சி தெளிவாக அளித்த பொழுதுதான் பிறந்தது. ஈரான் குறைந்த விலையில் சில ஆயிரம் செலவில் மிக அதிக எண்ணிக்கையில் 83000 ட்ரோன்களை உற்பத்தி செய்து வைத்துள்ளதாக வும், மாதமொன்றுக்கு 500 ட்ரோன்களை உற்பத்தி செய்யும் வலிமையைக் கொண்டுள்ளதாகவும் இந்திய போரியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இந்த உற்பத்தியை ஈராக் யுத்தத்தில் அமெரிக்கா பயன்படுத்திய லூசி டரோன்கள் ஈராக்கில் வீழ்ந்த காலம் முதலே அதனை எடுத்து உள்ளூரில் செய்யத் தொடங்கிவிட்டதால் மத்திய கிழக்கில் குறைந்த விலையில் தயாரிக்கப்பட்ட ட்ரோன்கள் பலநாடுகளிலும் பதுக்கப்பட்டுள்ள நிலையில் இந்தப் போரை வான்வெளி வழியாக முடிவுக்குக் கொண்டு வர நீண்ட காலம் எடுக்கும் என்பது அந்தத் தொலைக்காட்சி ஆய்வாளரின் கருத்தாக அமைந்தது. சிந்தித்துப் பார்த்தால் இது உண்மையாகவும் உள்ளது.

இந்நிலையில் விலையேற்றங்கள் தட்டுப்பாடுகள் ஆட்கள் பொருட்கள் போக்குவரத்துத் தடைகள் எனப் பலநிலைகளில் உலகின் நாளாந்த வாழ்வியல் பாதிப்புக்கு உள்ளாகும் பேரபாயம் வளர்ச்சி அடைகின்ற காலமாகவே அண்மைக்காலங்கள் அமையப் போகின்றன. இது எவ்வளவு காலத்துக்கு நீடிக்கும் என்பது எதிர்வு கூறக் கூடிய நிலையில் இல்லை. இந்த நிலையில் இந்துமாக்கடலின் இலங்கையைச் சுற்றியுள்ள பகுதியில் ஐந்தில் மூன்று பங்கினை தமது வாழ்வாதாரமாகக் கொண்டிருக்கும் ஈழத்தமிழர்களின் வாழ்வுக்குள்ள பேரிடர்கள் கொஞ்சமல்ல.

அப்படியானால் ஈழத்தமிழர்கள் இந்தப் பேரிடர் காலத்தில் எப்படி வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாகத் தங்களின் சொந்த மண் என்கின்ற தொன்மையும் தொடர்ச்சியுமான மக்கள் இறைமையுடன் இன்று வரை வாழ்ந்து வரும் ஈழத்தமிழர்கள் தங்களின் தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் தங்களுக்கான பாதுகாப்பான அமைதியுடன் கூடிய வளர்ச்சிகளை முன்னெடுக்கப்போகின்றார்கள் என்பதே இப்பொழுது எழுகின்ற முக்கிய கேள்வியாக உள்ளது.

இதற்கு பேரிடர்கால முகாமைத்துவ பேரவை ஒன்றை உலகெங்கும் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்கள் அமைத்து, தாயகத்தில் உள்ள ஈழத்தமிழர்களின் பாதுகாப்பான அமைதியுடன் கூடிய வளர்ச்சிகளுக்கு ஏற்ற செயல்திட்டங்களை சமூகநல பொருளியல் தொழில்நுட்ப திட்டங்கள் மூலம் முன்னெடுப்பதே சிறந்த வழியாக அமையும் என்பதே இலக்கின் இவ்வாரக் கருத்தாகவுள்ளது. அரசியல் விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்ட முறையில் மனிதநேயத் தேவைகளை முன்னிறுத்தி இந்தத் திட்டங்கள் திட்டமிடப்படுவது அவசியமாகிறது.

அதே வேளை சிறிலங்காவின் இன்றைய ஆட்சியாளர்களுக்கு இலங்கைத் தீவினை சமகால உலக நிலையில் அதன் இருப்பு நிலையில் தக்க வைப்பதற்கு அதன் காலனித்துவ ஆட்சிக்கு முற்பட்ட நிலையில் மக்களின் ஆட்சித்தன்மை உறுதிப்படுத்தப்பட்டாலே அனைவரும் ஒன்றிணைந்து செயற்படும் நல்லெண்ணம் வேகம் பெறும் என்பதையும் இலக்கு நினைவூட்ட விரும்புகிறது. 1505 இல் கோட்டே சிங்களவர் அரசும் 1621 இல் யாழ்ப்பாணத் தமிழர் அரசும் 1815 இல் கண்டி சிங்கள அரசும் 1832 இல் வன்னித் தமிழ்ச்சிற்றரசும் காலனித்துவ ஆட்சிக்கு உட்பட்டன என்பது அனைவரும் அறிந்தவொன்றாக உள்ளது.

காலனித்துவத்தில் இருந்து இந்த அரசுகளின் மக்கள் தாம் விடுதலை பெறுவதற்காகத்தான் போராடினார்கள் என்பதும் வரலாறு. இதனை உறுதி செய்த வரலாற்று நிகழ்வாகத்தான் கண்டி ரட்ட சபாவ, கோட்டே ரட்ட சபாவ, யாப்பானய ரட்ட சபாவ எனச் சிங்களத்திலேயே மூன்று தேசியஇனத்தன்மையான வாழ்வும் பிரித்தானிய காலனித்துவத்திடமிருந்து அந்த அந்த மக்களைச் சென்றடைய வேண்டுமென 1920களின் நடுப்பகுதியில் கோரிக்கை எழுப்பி கண்டி ரட்டசபாவையும் நடைமுறைப்படுத்திக் காட்டிய எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநயாக்கா, கண்டி கரையோரச் சிங்களவரிணைப்பு ஏற்பட்டதும் அக்கோரிக்கையை கைவிட்டு தன்னல அரசியலை முன்னெடுத்தார் என்பது வரலாறு.

சிங்கள இடதுசாரித் தலைமைகளும் ஈழத்தமிழரின் தன்னாட்சி உரிமையை ஏற்று அறிக்கைகள் விட்டதும் வரலாறு. ஆகவே தன்னாட்சியுடன் கூடிய கூட்டாட்சிக்கு உரியவர்கள் ஈழத்தமிழர்கள் என்பதற்கு இவற்றை விட வரலாற்று ஆதாரங்கள் வேறு தேவையில்லை. இந்த மூன்றாவது உலகப்போர் நோக்கிய இன்றைய காலகட்டத்திலும் தங்களுக்கான பாதுகாப்பான அமைதியுடன் கூடிய வளரச்சிகளை முன்னெடுக்க இயலாத நிலையுள்ளது. இதனை காலனித்துவத்தின் விளைவுகளை மாற்றுவதை தங்களின் இலட்சியமாகக் கொண்ட தேசிய மக்கள் சக்தி மாற்றியமைத்து ஈழத்தமிழர்களின் நிலம் அவர்களின் தாயகம் என்பதை ஏற்று இன்றைய காலத்துக்கு ஏற்ற முறையில் அரசியல் வேறுபாடுகளைக் கடந்து இடைக்கால தீர்வாகத் தன்னாட்சி உரிமையுடன் கூடிய கூட்டாட்சியை தேசிய மக்கள் சக்தி புதிய அரசியலமைப்பு மூலம் ஈழத்தமிழர்களுக்கு உறுதி செய்வதன் மூலமே நாட்டின் தேச இனங்களான சிங்களவர் தமிழரிடையிலும் குடிகளான இலங்கை முஸ்லிம்கள் இலங்கை மலையகத் தமிழரிடையிலும் இனநல்லிணக்கம் ஏற்பட்டு ட்ரம்பின்லான்டாக இலங்கைத் தீவு மாறாது தடுக்கப்படலாம் என்பதையும் இலக்கு எடுத்துரைக்க விரும்புகிறது.

ஈழத்தமிழர்களுக்கு தன்னாட்சி உரிமையுடன் கூடிய கூட்டாட்சியை இன்று வலியுறுத்தும் தமிழ்த் தேசிய மக்கள் பேரவையினர் இதற்கான அனைத்துலக ஏற்புடமையை திம்புப் பேச்சுவார்த்தை தருகிறது என்பதை பெப்ரவரி 15ம் திகதிய தீர்மானத்தால் உறுதி செய்து இதனை இன்றைக்கு உள்ள தாயகச் சூழலில் அடைவதற்கான பொதுச்சபை ஒன்றையும் நிறுவியுள்ளனர். அதே வேளை இந்த தன்னாட்சியுடன் கூடிய கூட்டாட்சி என்பது தமிழர்களின் 1976ம் ஆண்டு மே மாதம் 14ம் திகதிய வட்டுக்கோட்டைத் தீர்மானம் 1977 இல் மக்களாணையைப் பெற்று ஈழத்தமிழரின் அரசியல் கொள்கையாக உறுதியாகி 31 ஆண்டுகாலம் நடைமுறையரசின் மூலம் தங்களுடைய பாதுகாப்பான அமைதியான ஆட்சியையும் வளர்ச்சியையும் ஏற்படுத்திய அரசியற்பரிணாமத்தை மாற்றும் இயல்பற்றது என்பதை உறுதி செய்யும் வகையில் அமைந்த பெப்ரவரி 14ம் திகதிய ஈழத்தமிழர் உரிமைகள் பெருமன்றுத் தீர்மானமும் இவ்விடத்தில் முக்கியத்துவம் பெறுகின்றது.

இதனை மேலும் செம்மைப்படுத்தவதற்கான எண்ணங்களைக் கருத்துக்களை மார்ச் 15 வரை பகிருமாறும் அந்த அமைப்பு கோரியுள்ளது. இரண்டும் ஒன்றுடன் ஒன்று நோக்கத்தில் ஈழத்தமிழரின் பாதுகாப்பான அமைதி வாழ்வையும் வளர்ச்சிகளையுமே கோருகின்றன. ஒன்று உள்ளகத் தன்னாட்சி அடிப்படையில் தன்னாட்சியுடன் கூடிய கூட்டாட்சியை பெற முயற்சிக்கிறது. முயற்சி புதிது விளக்கங்கள் நிறையத் தேவை. மற்றையது வெளியக தன்னாட்சி உரிமையையும் இழக்காத வகையில் செயற்பாடுகளை அமைக்க முயற்சிக்கிறது. இதனை எப்படி இன்றைய நடைமுறை அரசியலில் செய்வதென்பதற்கு நிறைய விளக்கங்கள் தேவை இரண்டிலுமே விவாதத்தின் மூலம் விளக்கங்கள் வளர்க்கப்பட வேண்டியனவாக உள்ளன. இதற்கான உரையாடல்களை இருதரப்பினரும் உருவாக்கி ஆரோக்கியமான கருத்துப் பரிமாறல்கள் மூலம் ஈழத்தமிழரின் வாழ்வை வளம் பெறவைக்க வேண்டுமென்பதை இலக்கு மீளவும் மீளவும் வலியுறுத்துகிறது.

**ஆசிரியர்**



# இந்தியப் பெருங்கடலில் மூண்ட போர்

# ஈரானிய போர்க்கப்பல் தகர்ப்பும் இலங்கையின் இராஜதந்திர நெருக்கடியும்


இந்தியப் பெருங்கடல் பிராந்தியம் எப்போதும் சர்வதேச அரசியலின் அதிகார மையமாகவே இருந்து வந்துள்ளது. ஆனால், 2026 பெப்ரவரி 28இல் ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் வெடித்த நேரடிப் போர், அமைதிப் பிராந்தியமாக கருதப்பட்ட இந்த கடற்பரப்பை பதற்றமான யுத்த களமாக மாற்றியுள்ளது.



குறிப்பாக, இலங்கையின் தெற்கு கடல் எல் லையில் இருந்து 19மைலில் ஈரானிய போர்க்கப்பல் அமெரிக்காவினால் மூழ்கடிக்கப்பட்ட சம்பவம், தெற்காசிய பிராந்தியத்தில் பாரிய இராஜதந்திர மற்றும் பாதுகாப்பு அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியாவின் விசாகப்பட்டினத்தில் கடந்த பெப்ரவரி 15 முதல் 25 வரை நடைபெற்ற 'மிலான் 2026' சர்வதேச கடற்படைப் பயிற்சி, வரலாற்றிலேயே மிகப்பெரிய கடல்சார் நிகழ்வாக அமைந்தது.

74 நாடுகள், 42 போர்க்கப்பல்கள் பங்கேற்ற இந்த நிகழ்வில் ஈரானும் தனது நட்பு ரீதியான பங்களிப்பை வழங்கியிருந்தது. ஈரானிய கடற்படையின் ஐஆர்ஐஎஸ் டேனா (IRIS Dena), ஐஆர்ஐஎஸ் புஷேர் (IRIS Bushehr) மற்றும் ஐஆர்ஐஎஸ் லவான் (IRIS Lavan) ஆகிய மூன்று கப்பல்கள் இதில் கலந்துகொண்டன.




பயிற்சிகள் முடிவடைந்த நிலையில், வழக்கமான இராஜதந்திர மரபுகளின்படி இலங்கை கடற்படைத் தளபதியின் அழைப்பை ஏற்று, இந்த மூன்று கப்பல்களும் இலங்கைக்கு 'ஒத்துழைப்பு விஜயம்' மேற்கொள்ளத் திட்டமிட்டன. பெப்ரவரி 26ஆம் திகதி இதற்கான உத்தியோகபூர்வ கோரிக்கை ஈரானிடமிருந்து இலங்கையிடம் விடுக்கப்பட்டது. ஆனால், அதே காலப்பகுதியில் சர்வதேச அரசியலில் ஏற்பட்ட திடீர் திருப்பங்கள் இந்தக் கப்பல்களின் தலைவிதியை மாற்றியமைத்தன.

ஈரானிய கப்பல்கள் இலங்கை கடற்பரப்பை நெருங்கிய வேளையில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஈரானுக்கு எதிரான போரைப் பிரகடனப்படுத்தினார். இந்தச் சூழலில், ஈரானிய கப்பல்களைத் தனது துறைமுகத்திற்குள் அனுமதிப்பது சர்வதேச அளவில் தன்னை ஒரு தரப்புடன் அடையாளப்படுத்தும் என்று இலங்கை அரசாங்கம் அஞ்சியது.

## விதுரன்

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கம், போர்ச் சூழலைக் காரணம் காட்டி அனுமதி வழங்குவதில் காலதாமதம் செய்தது. இலங்கை கடல் எல்லைக்கு (19 கடல் மைல்கள்) அப்பால், ஆனால் பொருளாதார வலயத்திற்குள் இந்தக் கப்பல்கள் காத்திருக்க நேரிட்டது.



இலங்கை அரசாங்கத்தின் தீர்மானம் எடுப்பதில் ஏற்பட்ட தயக்கமே இறுதியில் ஒரு பாரிய அழிவுக்கு வழி வகுத்தது என்று பாதுகாப்பு ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஆனால் அதனை ஏற்றுக்கொள்வதற்கு இலங்கை அரசாங் கம் தயாராக இல்லை. ஈற்றில் இழைக்கப்பட்ட தவறுக்கு பிராச்சியத்தம் தேடும் செயற்பாட்டில் அது இறங்கியுள்ளது.

மார்ச் 4ஆம் திகதி அதிகாலை 5:08 மணியளவில், காலி துறைமுகத்திலிருந்து சுமார் 19 கடல் மைல் தொலைவில் தரித்து நின்ற ஐஆர்ஐஎஸ் டேனா மீது அமெரிக்காவின் மார்க் 48 (Mark 48) ரக டோர்பிடோ ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டது.

1,500 தொன் எடையுடைய, அதிநவீன தாக்குதல் வசதிகளைக் கொண்ட இந்த போர்க்கப்பல், அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பலால் இலக்கு வைக்கப்பட்டது. இந்தத் தாக்குதல் ஈவிரக்கமற்றதாக அமைந்தது. கப்பல் இரண்டாகப் பிளந்து சில நிமிடங்களிலேயே கடலுக்குள் மூழ்கியது.

இலங்கை கடற்படை மற்றும் விமானப்படை நடத்திய மீட்புப் பணிகளின் போது ஈரானிய கடற்படையைச் சேர்ந்த 32 பேர் காயங்களுடன் மீட்கப்பட்டனர். துரதிஸ்டவசமாக 90பேர் சடலங்களாக மீட்கப்பட்டனர். அமெரிக்கா இந்தத் தாக்குதலுக்குப் பயன்படுத்திய ஆயுதம், கப்பலின் அடித்தளத்தைச் சிதைக்கும் வல்லமை கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.



இந்தத் தாக்குதல் சம்பவம் நிகழ்ந்த பின்னணியை ஆராயும்போது, இலங்கை அரசாங்கம் எதிர்கொண்ட இராஜதந்திர நெருக்கடி அப்பட்டமாகத் தெரிகிறது. மார்ச் 4ஆம் திகதி அதிகாலை காலி கடற்பரப்பில் அபாய சமிக்ஞை ஒலித்தபோது, அதுவொரு பாரிய போர்க்கப்பல் சிதைக்கப்பட்டதன் விளைவு என்பதை யாரும் முதலில் அறிந்திருக்கவில்லை.

95 மீற்றர் நீளம் கொண்ட ஐஆர்ஐஎஸ் டேனா கப்பல், ஈரானிய கடற்படையின் பெருமையாகக் கருதப்பட்ட 'மௌஜ்' (Mowj) வகையைச் சார்ந்தது. இது ஹெலிகொப்டர்களைத் தரையிறக்கும் வசதி கொண்ட ஒரு முழுமையான தாக்குதல் கப்பல் என்பதால், அதனை அமெரிக்கா முதன்மை இலக்காகக் கொண்டது.

இலங்கைத் தரப்பில் அனுமதி கிடைப்பதில் ஏற்பட்ட தாமதம், அந்தக் கப்பலை சர்வதேச கடற்பரப்பில் பாதுகாப்பற்ற நிலையில் நிறுத்தி வைத்திருக்கக் காரணமானது. ஒருவேளை உரிய நேரத்தில் அனுமதி வழங்கப்பட்டிருந்தால், இலங்கை கடல் எல்லைக்குள் போர்க்கப்பலைத் தாக்குவதற்கு அமெரிக்கா தயங்கியிருக்கலாம் அல்லது சர்வதேச சட்டங்களின்படி அது தவிர்க்கப்பட்டிருக்கலாம்.



இச்சம்பவத்தில் மற்றுமொரு அதிர்ச்சியான தகவல் அவுஸ்திரேலியப் பிரதமர் அந்தோனி அல்பனீசிடமிருந்து வந்தது. தாக்குதல் நடத்திய அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பலில் மூன்று அவுஸ்திரேலிய வீரர்கள் இருந்ததை அவர் ஒப்புக்கொண்டார். அவர்கள் வழக்கமான கூட்டுப் பயிற்சியில் இருந்ததாகக் கூறினாலும், இது இந்தியப் பெருங்கடலில் அமெரிக்கா மற்றும் அதன் கூட்டாளிகளின் தீவிரமான நடமாட்டத்தை உறுதிப்படுத்தியுள்ளது.

இது பிராந்திய நாடுகளுக்கு, குறிப்பாக

தொடர்ச்சி: பக்கம் 09

# மத்திய கிழக்கில் போர் பதற்றம்: இலங்கையும் பொருளாதாரத்தில் பாதிப்படையும்!

பா.அரியநேத்திரன்



மத்திய கிழக்கில் தீவிரமடையும் உச்சக்கட்ட தாக்குதல்களால் அது இலங்கைக்கும் பாதிப்புக்களை ஏற்படுத்தும் அபாயநிலை உள்ளது.



மத்திய கிழக்கில் போர் பதற்றம் ஏற்பட்டுள்ள நிலையில் கடந்த (04/03/2026) இந்தியப் பெருங்கடலில் இலங்கைக்கு அருகாமையில் ஈரானிய போர்க்கப்பலை அமெரிக்கா டார்பிடோ மூழ்கடித்த செய்தி இலங்கை உள்ளிட்ட பல நாடுகளுக்கு அதிர்ச்சி ஏற்படுத்தியது.



மேலும், இந்த தாக்குதலில் ஈரான் போர்க்கப்பல் மீது அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல் நடத்திய தாக்குதலில் நூற்றுக்கு மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக தகவல் கிடைத்தது.


இந்த தாக்குதலால் கப்பல் போக்குவரத்துக்கள் இடைநிறுத்தப்படின் மேலும் இலங்கைக்கு பாரிய பொருளாதார நெருக்கடிகள் தோன்ற வாய்ப்புள்ளது.

போர் மோதல்கள் காரணமாக இதுவரை மொத்தம் 205 விமான சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளதாக துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அநுர கருணாதிலக தெரிவித்திருந்தார்.

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் தற்போது நிலவும் சூழ்நிலையால் விமானப் போக்குவரத்துத் துறையில் ஏற்பட்டுள்ள தற்போதைய நிலைமை குறித்து கடந்த வாரம் அமைச்சின் வளாகத்தில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலின் பின்னர் அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

“நாட்டுக்கு வரவிருந்த 107 விமானங்களும், புறப்படவிருந்த 98 விமானங்களும் என மொத்தம் 205 விமான சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளதாகக் கூறினார்.

மத்திய கிழக்கில் நிலவும் போர் சூழ்நிலை காரணமாக, இலங்கையிலுள்ள தூதரகங்கள் மற்றும் உயர் ஸ்தானிகராலயங்கள் மற்றும் நாட்டில் வசிக்கும் வெளிநாட்டினரின் பாதுகாப்புக்காக விசேட திட்டம் செயல்படுத்தப் பட்டுள்ளது



மத்திய கிழக்கு நாடுகளில் பணிபுரியும் சுமார் பத்து இலட்சம் இலங்கைத் தொழிலாளர்களின் உயிர் பாதுகாப்பு மற்றும் நலன்புரி விடயங்கள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அங்குள்ள இலங்கையர்களின் பாதுகாப்பு மற்றும் அவர்களது தொழில் வாய்ப்புகளை உறுதிப்படுத்துவதில் அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்,இந்த விவகாரங்கள் மிகவும் அவசரமானவை என்பதால், அரசாங்கம் உடனடியாக இதில் தலையிட்டு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதே இலங்கையின் நிலைப்பாடாகும்.

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போர் பதற்றத்தால் பல நாடுகளிலுள்ள மக்கள் அச்சத்துடன் உள்ளார்கள் என்றே கூறலாம்.

ஏனென்றால் பல மத்தியகிழக்கு நாடுகளில் தமது உறவுகள் கல்விக்காக வேலைக்காக சென்றுள்ள நிலையில் அவர்க ளின் நிலை குறித்து மற்றைய நாடுகளிலுள்ள மக்கள் கவலையில் உள்ளனர்.

உக்கிரமாக போர் தொடர்வதால் இலங்கையில் எரிபொருள் பற்றாக்குறை ஏற்படலாம், சமையல் எரிவாயு பற்றாக்குறை ஏற்படலாம், அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடுகள், மருந்துப்பொருட்களுக்கும் தட்டுப்பாடுகள் ஏற்படலாம்.

சிலவேளைகளில் தொடர்சியாக கடல் மார்க்கப்போக்குவரத்துக்களுக்கும்,விமானப்போக்குவரத்துக்களுக்கும் தடைகள் ஏற்படுமானால் பாரிய பொருளாதார நெருக்கடிகளை இலங்கை சந்திக்க கூடிய வாய்புகள் ஏற்படலாம் என்பது உண்மை.



ஆனால் இலங்கை ஜனாதிபதி அநுர மற்றும் அமைச்சர்கள் இலங்கையில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது. தேவையான அளவு எரிபொருட்கள் உள்ளன என்று அடிக்கடி கூறி வருகின்றனர்.

எருபொருட்களை வாகனங்களில் மட்டுமே (டீசல், பெற்றோல்) விநியோகிக்குமாறு எரிபொருள் நிலையங்களுக்கு அறிவுறுத்தப் பட்டாலும் பொதுமக்கள் வாகனங்களில் எரிபொருட்களை நிரப்பி சிலர் வீடுகளில் சேமித்து வைக்கும் செயல்களும் பல மாவட்டங்களில் இடம்பெற்றுள்ளது.

இதற்காக விசேட கண்காணிப்பு பொலிசார் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.சிலர் கைது செய்யப்பட்டுள்ளதையும் காணமுடிகிறது.

இந்தப்போர் தொடர்பாக இலங்கை மக்கள் ஒருசாரார், மற்றும் அரசியல் வாதிகள் சிலர் அமெரிக்கா, இஸ்ரேலுக்கு ஆதரவாகவும், இன்னும் சிலர் ஈரானுக்கு ஆதரவாகவும் கருத்துக்களை கூறிவருவதை அவதானிக்க முடிகிறது.

தொடர்ச்சி: பக்கம் 08




**அனைத்துலக உயிரோடை தமிழ் வானொலி மற்றும் இலக்கு மின்னிதழ் இணைந்து நடத்திய 'தாயககளம்" நிகழ்வில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேந்திரன் அவர்கள் கலந்து கொண்டு, தாயகத்தின் தற்போதைய அரசியல் சூழல், கட்சிகளின்ஒற்றுமை மற்றும் சர்வ தேச அரசி யல் மாற்றங்கள் குறித்துவிரிவான கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார்**

**கேள்வி :**

**தமிழ் சட்டத்தரணிகள் பேரவையின் ஒருமைப் பாட்டு முயற்சிபற்றி உங்கள் கருத்து என்ன?**

**பதில் :**

தமிழ் சட்டத்தரணிகள் பேரவை, குறிப்பாக சட்டத் தரணிரத்னவேல் ஐயா அவர்களின் தலைமையில் எடுத்த இந்தமுன்னெடுப்பை வரவேற்கிறேன். இருப்பினும், இதுகாலங்கடந்த ஒரு முயற்சியாகவே எனக்குத் தோன்றுகிறது. முள்ளிவாய்க்கால் முடிந்து 17 ஆண்டுகள் கடந்துவிட்டநிலையில், இதுவரை தமிழ் தேசியக் கட்சி களோ அல்லதுசமூக அமைப்புகளோ இத்தகைய ஒரு நிலையானகட்டமைப்பை உருவாக்கவில்லை.

தேர்தலை இலக்காகவைத்தே கட்சிகள் இணைவ தும் பிரிவதுமாக உள்ளன.தற்போது இலங்கை தமிழ் அரசு கட்சி, தமிழ் தேசிய மக்கள்முன்னணி உள்ளிட்ட பிரதான கட்சிகள் இதில்பங்கேற்றுள்ளன. கஜேந்திரகுமார் பொன்னம் பலம், எம்.ஏ. சுமந்திரன் போன்ற சட்டத்தரணிகளே கட்சித் தலைவர்களாகவும் இருப்பதால், அவர்களுக்குள் ஒரு இணக்கப்பாடு ஏற்பட வாய்ப்புள்ளது. மட்டக்களப்பு உள்ளிட்டவடகிழக்கின் பிற சட்டத்தரணிகளையும் உள் வாங்கி, அரசியல்தீர்வை நோக்கி ஒருமித்துச் செயல்பட அவர்கள் திட்டமிட்டுள்ளனர். இது வெறும் சந்திப்போடு நின்றுவிடாமல் செயலுருப் பெற வேண்டும்.

**கேள்வி :**

**'ஒற்றையாட்சி' முறை மற்றும் கொள்கை ரீதியான முரண்பாடுகள் தீர்க்கப்படுமா?**

**பதில் :**

தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஒற்றையாட்சி முறையை முற்றாக நிராகரிக்க வேண்டும் என்ற நிலையில் உறுதியாக உள்ளது. ஆனால், இலங்கை தமிழ் அரசுகட்சியின் ஒரு தரப்பினர் கடந்த கால நல் லாட்சி அரசாங்கத்தின் இடைக்கால அறிக்கையை அடிப் படையாகக் கொண்டு நகர விரும்புகிறார்கள். அண்மையில் வெளியானதிருமலை பிரகடனத்தின்படி, 1948 முதல் நாம் வழங்கியஎந்தவொரு உள்ளகப் பொறிமுறைத் திட்டத் தையும் சிங்களஅரசாங்கங்கள் ஏற்கவில்லை.

எனவே, இனி இலங்கைஅரசாங்கத்திடம் தீர்வுத் திட்டங்களை நீட்டுவதில் பயனில்லை.ஒரு தேசமாகத் திரண்டு சர்வதேச மத்தியஸ்தத்துடன் கூடியஒரு பொது வாக்கெடுப்பு (Referendum) மூலமே தீர்வை அடைய முடியும். தற்போதைய தென்னிலங்கை அரசியல் சூழ லில், ஜனாதிபதி முறையை மாற்றுவது அல்லது புதிய அரசியல்யாப்பைக் கொண்டு வருவது என்பது தமிழ் மக்களுக்குஏமாற்றத்தையே தரும் என்பதால், கொள்கை ரீதியான தெளிவு அவசியமானது.

**கேள்வி :**

**வட்டுக்கோட்டை தீர்மானத்தின் தற்போதைய நிலை மற்றும்பொதுவாக்கெடுப்பு சாத்தியமா?**

**பதில் :**

வட்டுக்கோட்டை தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 50 ஆண்டுகள்ஆகப்போகிறது, அதன் வலிமை இன்றும் குறையவில்லை.அன்று அகிம்சை மற்றும் ஆயுதப் போராட்டங்களாகஇருந்தவை இன்று சர்வதேச மயப் படுத்தப்பட்டுள்ளன.போர்க்குற்றங்களுக்கு நீதி, காணாமல் ஆக்கப்பட்டோர்விவகாரம் என அனைத்தும் இன்று சர்வ தேச அரங்கில்உள்ளன.

ஒரு பொதுவாக்கெடுப்பு என்று வரும்போது, அதுஈழத்தில் இருப்பவர்களோடு மட்டும் சுருங்கிவிடக் கூடாது. புலம்பெயர்ந்து வாழும் பல இலட்சம் ஈழத் தமிழர்களுக்கும்வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட வேண் டும். அவ்வாறு ஒருசர்வதேசக் கண்காணிப்பில் பொதுவாக் கெடுப்புநடத்தப்பட்டால், 80 சதவீதத்திற்கும் அதிகமான மக்கள் தமிழ்தேசியம் மற்றும் சுயநிர்ணய உரிமைக்கு ஆதர வாகவேவாக்களிப்பார்கள்.

**கேள்வி :**

**தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தோல்வி மற்றும் கட்சிகளின்ஒற்றுமையின்மை பற்றி?**

**பதில் :**

2010-ல் விடுதலைப் புலிகள் அற்ற சூழலில், தீர்வுகிடைக்காவிட்டால் மக்களைத் திரட்டிப் போராடுவோம் என்று கூறித்தான் நாம் வாக்கு கேட்டோம். ஆனால் காலப் போக்கில்கூட்டமைப்பின் தலைமைத்துவத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்மற்றும் சில தனிநபர்களின் உள்வாங்கல்கள் காரணமாக எமதுஇலக்கு திசைமாறியது. நாடாளுமன்றக் குழுக்களில் நாம்பலமுறை ஆட்சேபனை தெரிவித்தும் சில கொள்கைமுடிவுகளைத் தடுக்க முடியவில்லை.

இன்று சர்வதேச சமூகம்நம்மிடம் கேட்பது "ஏன் நீங்கள் ஒற்றுமையாக வரவில்லை?" என்பதுதான். அண்மை யில் பிரித்தானியத் தூதுவரைச்சந்திக்கச் சென்றபோது கூட, கட்சிகள் தனித்தனியாகச்சென்றது எமது பலவீனத்தையே காட்டியது. 13-வதுதிருத்தத்தை மட்டும் பிடித்துத் தொங்காமல், ஒருமித்தஅரசியல் அபிலாஷைகளுடன் நாம் நகர வேண் டும்.

**கேள்வி :**

**வடகிழக்கில் தென்னிலங்கைக் கட்சிகளின் ஆதிக்கம்அதிகரிப்பது பற்றி உங்கள் பார்வை?**

**பதில் :**

இது மிகவும் கவலைக்குரிய விடயம். 1948-க்குப் பிறகு முதன்முறையாக ஒரு தென்னிலங்கைக் கட்சி (தேசிய மக்கள்சக்தி - NPP) வடகிழக்கில் 12 ஆசனங்களைப் பெற்றுள்ளது.தமிழ் தேசியக் கட்சிகளின் பிளவுகளே இந்த இடைவெளியைஉருவாக்கியுள்ளன.

தமிழ் அரசு கட்சிக்குள்ளேயே இருஅணிகள் பிரிந்து நீதிமன்றம் சென்று கொண்டிருப்பதுவேதனையானது. இனி வரும்காலங்களில்நாடாளுமன்றத்தில்புதியஅரசியல்யாப்பு விவாதிக்கப்படும்போது, தமிழ்பிரதிநிதிகள் தனித்தனியாக நின்றால் அது வரலாற்றுத்துரோகமாக அமையும். தமிழ் தேசியத்தை நீர்த்துப்போகச்செய்யும் சக்திகளை மக்கள் அடையாளம் கண்டு புறக்கணிக்கவேண்டும்.

**கேள்வி :**

**சர்வதேசப் பதற்றங்கள் மற்றும் ஈரானியக் கப்பல் தாக்குதல்இலங்கையை எவ்வாறு பாதிக்கும்?**

**பதில் :**

இந்து சமுத்திரத்தில் ஈரானியக் கப்பல் தாக்கப்பட்டதும், அதற்கு அமெரிக்கா உரிமை கோரியுள்ளதும் பிராந்தியபாதுகாப்பிற்குப் பெரும் அச்சுறுத்தலாகும். இதுஇலங்கையின் பொருளாதாரத்தில், குறிப்பாக எரிபொருள்மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலையில் பெரும்தாக்கத்தை ஏற்படுத்தும். மத்திய கிழக்கில் உள்ள 10 இலட்சத்திற்கும் அதிகமான இலங்கைத் தொழிலாளர்களின்பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது. ஈழத் தமிழர்களைப்பொறுத்தவரை, எமது இனப்படு கொலைக்குத் துணைபோனபல நாடுகள் இன்று இத்தகைய நெருக்கடிகளைச் சந்திப்பதுஒரு இயற்கையின் நீதி (Divine

தொடர்ச்சி: பக்கம் 12

**உயிரோடைத் தமிழ் வானொலிக்கு பா. அரியநேந்திரன் அவர்கள் அளித்த செவ்வியின் முக்கிய பகுதிகளை இலக்கின் வாசகர் களுக்காக இங்கே தருகின் றோம். இந்த நேர்காணலை YouTube இல் முழுமையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான் (Scan) செய்யவும்.**



# கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் இருப்பு கேள்விக்குறி!



மட்டுநகரான்

இந்த நாட்டில் மாறிமாறி ஆட்சிக்குவந்த சிங்கள பௌத்த பேரினவாத அரசுகள் வெளிப்படையாகவே இனவாத நோக்குடனான செயற்பாடுகளை கடந்த காலங்களில் முன்னெடுத்துவந்தனர்.குறிப்பாக வடகிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் பூர்வீக நிலங்களை அபகரித்து இந்த நாட்டில் தமிழர்களின் குரல்களை நசுக்குவதற்கு முழுமையான நடவடிக்கைகளை மாறிமாறி ஆட்சிக்குவந்த அரசுகள் முன்னெடுத்துவந்தன.

இன்றைய ஆட்சிக்காலம் மிகவும் மாறுபட்ட நிலையில் இருப்பதை இன்று காணமுடிகின்றது. எங்களிடம் இனவாதம் இல்லை,இந்த நாட்டில் அனைவரும் சமம். அனைவருக்கும் ஒன்றான ஆட்சியென்று கூறிக்கொண்டு முன்னெடுக்கப்பட்டுவரும் செயற்பாடு என்பது வடகிழக்கு தமிழ் மக்களின் இறைமையினை இல்லாமல்செய்வதற்கான பாரிய முயற்சியாகவே பார்க்கப்படவேண்டியுள்ளது.

இன்று வடகிழக்கில் காணப்படும் தமிழ் தேசிய அரசியல் கட்சிகளிடையே காணப்படும் முரண்பட்ட நிலைமையும் இலங்கை தமிழரசுக்கட்சிக்குள் காணப்படும் பதவி மோக உள்வீட்டு முரண்பாடுகளும் இன்று வடகிழக்கில் தமிழர்களின் இருப்பினை கேள்விக்குள்ளாக்கிவரும் நிலைமையினை காணமுடிகின்றது.

குறிப்பாக கிழக்கு மாகாணம் தொடர்ச்சியாக எதிர்கொள்ளும் காணி அபகரிப்புகள் என்பது தமிழர்களின் இருப்பினை தொடர்ந்து கேள்விக்குள்ளாக்கிவருகின்றது. ஒரு புறம் சிங்கள பௌத்த பேரினவாதமும் மறுபுறம் முஸ்லிம் அரசியல்வாதிகளும் திட்டமிட்ட வகையில் கிழக்கின் இனப்பரம்பலை மாற்றும் செயற்பாடுகளை முன்னெடுத்துவருகின்றனர்.

வடகிழக்கு தமிழர் தாயகம் என்ற நோக்கிலும் தமிழ்பேசும் மக்கள் என்ற வகையிலும் முஸ்லிம் மக்களை நாங்கள் ஒன்றாக பார்த்தாலும் கிழக்கினைப்பொறுத்த வரையில் முன்னெடுக்கப்படும் காணி அபகரிப்புகளும் திட்டமிட்ட குடியேற்றங்களும் வடகிழக்கு இணைப்புக்கு எதிரான ஒரு செயற்பாட்டு நோக்குடனேயே முன்னெடுக்கப்பட்டுவருகின்றதை காணமுடிகின்றது.குறிப்பாக முஸ்லிம்களை கொண்டு சிங்கள பௌத்த தேசியவாதமே இந்த திட்டமிட்ட குடியேற்றங்களை கிழக்கில் முன்னெடுத்து வருகின்றது.

கிழக்கில் முஸ்லிம்களை தமிழர்களில் இருந்து பிரித்து வடகிழக்கு இணைப்புக்கு முஸ்லிம் மக்கள் தயார் இல்லை என்று காட்டுவதற்கு அல்லது கிழக்கு சிங்கள-முஸ்லிம்களின் தாயகம் என்று காட்டுவதற்கு அல்லது கிழக்கு முஸ்லிம் மக்களின் தாயகம் என்று காட்டுவதற்கு தொடர்ச்சியான முனைப்புகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த முன்னெடுப்புக்கு முஸ்லிம்கள் மத்தியில் காணப்படும் தூரநோக்கற்ற அரசியல்வாதிகளும் அறிவார்ந்தவர்களும் உடன்பட்டுச்செல்வதே முஸ்லிம் சமூகத்திற்குள் காணப்படும் பெரும் பிரச்சினையாக காணப்படுகின்றது.

இந்த நாட்டில் வடகிழக்கு இணைந்த தமிழர் தாயகமே முஸ்லிம் மக்களுக்கும் பாதுகாப்பான தாயகமாகவும் அவர்களுக்கான பாதுகாப்பான இடமாகவும் வடகிழக்கு காணப்படும்.சிங்கள பௌத்த பேரிவாத சக்திகள் இந்த நாட்டில் தமிழ்-முஸ்லிம் மக்களை சுதந்திரமாகவும் நிம்மதியாகவும் வாழவிடமாட்டார்கள் என்பது ஈஸ்டர் தாக்குதலை தொடர்ந்து முஸ்லிம் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட விடயங்களை சான்றுபகிரும்.

இவ்வாறான நிலையிலேயே கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் இருப்பினை கேள்விக்குட்படுத்தும் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.இந்த நாட்டில் அனைவருக்கும் சமமான ஆட்சியை நடாத்தப்போகின்றோம் என்று கூறும் இந்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கடந்த ஆட்சியாளர்கள் முன்னெடுத்த அதே செயற்பாடுகளையே இன்றும் முன்னெடுப்பதை காணமுடிகின்றது.



அண்மையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கார்மலை பகுதிகளில் கால்நடை வளர்த்துவருவோர் அப்பகுதிக்கு வந்த அம்பாறை மாவட்ட வனஇலாகா பிரிவினரால் வெளியேற்றப்பட்டுள்ளதுடன் அப்பகுதிக்குள் வரக்கூடாது என அச்சுறுத்தப்பட்டுள்ளனர்.காலம்காலமாகவும் பரம்பரை பரம்பரையாக கால்நடைகளை வளர்த்துவந்த பகுதிகளிலிருந்து அவர்களை வெளியேற்றி அப்பகுதிகளுக்கும் பெரும்பான்மையினத்தவர்களை கொண்டுவருவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றதா என்ற கேள்வியை கால்நடை பண்ணையாளர்கள் எழுப்பியுள்ளனர்.

கார்மலை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் கால்நடைகளை வளர்ப்போரை வரக்கூடாது என அம்பாறை மாவட்ட வனஇலாகாவினர் அச்சுறுத்தியுள்ளனர். கார்மலைக்கு அருகில் உள்ள சில பகுதிகளை அம்பாறை மாவட்டத்திற்கு தாரைவார்க்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுவது தொடர்பில் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும் அப்பகுதியில் கால்நடை வளர்ப்போர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். இது தொடர்பில் பல்வேறு தரப்பினரின் கவனத்திற்கும் கொண்டுவந்தபோதிலும் இதுவரையில் எந்தவித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லையெனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேபோன்று மட்டக்களப்பு மாவட்டத்தின் மிகவும் பிரசித்திபெற்றதும் பிரதான நீர்ப்பாசன குளங்களில் ஒன்றாகவும் காணப்படும் உன்னிச்சைக் குளத்தினை சூழவுள்ள பகுதியை சுற்றுலாத்தளமாக விரிவுபடுத்தி செயற்படுத்துவதற்கு மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேசசபை காணிகளை வழங்குமாறு வனஇலாகாவுக்கு கோரியபோதிலும்அந்தகாணிகளைவழங்குவதற்குநடவடிக்கையெடுக்கப்படவில்லையென்பதுடன் குறித்த பகுதிகளில் முன்னெடுக்கப்படவுள்ள சுற்றுலா மேம்பாட்டுதிட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான அனுமதி வழங்குவதற்கு கிழக்கு மாகாண ஆளுனர் மற்றும் அவரது அதிகாரிகள் இழுத்தடிப்புகளை முன்னெடுத்துவருவதாக அண்மையில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக்குழுவின் கூட்டத்தில் மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேசசபையின் தவிசாளர் கோபாலபிள்ளையினால் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

அத்துடன் மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப் பகுதியான கச்சக்கொடிசுவாமிமலை பகுதியில் இராணுவத்தினருக்கு தலா மூன்று ஏக்கர் வீதம் 1500 ஏக்கர் காணிகளை முந்திரிகை செய்கைக்கு வழங்கியுள்ளதாக குற்றச்சாட்டுகளைமுன்வைத்தார்.தமது பகுதிகளில் சுற்றுலாத் துறையினை அபிவிருத்தி செய்து தமது பிரதேச சபையின் வருமானத்தினை அதிகரிப்பதற்கு தடை போடுபவர்கள் காடுகளை அழித்து இராணுவத்திற்கு காணியை வழங்கும் செயற்பாடுகளை முன்னெடுப்பதாக குற்றச்சாட்டுகளை முன்வைத்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப்பகுதிகளை ஆக்கிரமிக்கும் செயற்பாடுகள் கடந்த காலம் தொடக்கம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றன.இன்றைய ஆட்சிக்காலத்திலும் அந்த செயற்பாடுகள் தொடர்ந்த வண்ணமே உள்ளது.தமிழர்களின் இருப்பினை மட்டக்களப்பு மாவட்டத்தில் மாற்றுவதற்கான தொடர்ச்சியாக முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கெவிழியாமடு பகுதியில் இன்று வெள்ளிக்கிழமை(06-03-2026)முன்பள்ளியொன்றினை அமைப்பதற்கான கல்நடும் நிகழ்வில் பட்டிப்பளை பிரதேச செயலாளர் கலந்துகொண்டுள்ளார்.2012ஆம் ஆண்டு மட்டக்களப்பு மங்கலராமய விகாராதிபதி அம்பிட்டிய சுமனரத்ன தேரரினால் அப்பகுதியில் சிங்கள மக்களை கொண்டுவந்து குடியேற்றம் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.அதற்கு அன்று அப்பகுதியிலிருந்த பிரதேச செயலாளர் சிவப்பிரியா வில்வரெட்னம் தடையேற்படுத்தியதன் காரணமாக அதற்கு எதிராக மட்;டக்களப்பு மாவட்ட செயலகத்தினை முற்றுகையிட்டு போராட்டங்களை நடாத்தியிருந்தார்.

எந்தபோராட்டத்திற்கும் அஞ்சாமல் அன்றைய பிரதேச செயலாளர் அந்த பிரதேசத்தில் முன்னெடுத்துவந்த திட்டமிட்ட குடியேற்றத்திற்கு ஆதரவு வழங்கமுடியாது என்ற உறுதிப்பாட்டுடன் நின்றதன் காரணமாக பிக்குவின் குடியேற்ற திட்டம் தோல்வியடைந்த நிலையில் நல்லாட்சிக்காலத்தில் சஜித் பிரேமதாசவின் துணையுடன் அந்த வீட்டுத்திட்டம் பூர்த்திசெய்யப்பட்டு இலகுவான குடியேற்றம் செய்யப்பட்டு இன்று பாடசாலைகள் அமைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.


இதேபோன்றுதான் மயிலத்தமடு,மாதவனை பகுதியில் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் கால்நடை பண்ணையாளர்களுக்கு வெறும் 1400 ஏக்கர் காணிகள் வழங்கப்பட்டு ஏனைய காணிகள் திட்டதிட்ட குடியேற்றங்களை முன்னெடுப்பதற்கான ஏதுவான நிலைகள் காணப்படுகின்றன.



இந்த செயற்பாடுகள் குறித்து தேசிய மக்கள் சக்தியினர் வெளிப்படையாக தெரிவிக்காவிட்டாலும் தேசிய மக்கள் சக்தியின் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள், கட்சியினருக்கு தெரியாமலும் பல்வேறு செயற்பாடுகளை மட்டக்களப்பில் முன்னெடுக்கும் நிலைமை காணப்படுகின்றன.கிழக்கு மாகாண ஆளுனரின் சில செயற்பாடுகள் அவ்வாறு அமைந்துள்ளதாக அண்மை யில் இலங்கை தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பிரதேச அபிவிருத்தி குழு கூட்டத்தில் குற்றஞ்சாட்டியிருந்தார்.

இவ்வாறான நிலையிலேயே இன்று கிழக்கு மாகாணமும் மட்டக்களப்பு மாவட்டமும் காணப்படுகின்றது. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மட்டுமல்ல எந்த

தொடர்ச்சி: பக்கம் 12



# சர்வதேச பெண்கள் நாள்: நவீன பெண்ணியத்தின் ஓர் பார்வை

இன்றைய வாழ்வியல் திருப்பத்தில் பெண்ணியம் சுதந்திரம் அடைந்திருக்கிறதா என்றால் அது ஒரு கேள்வியாகவே எழுகின்றது. தொழில் நுட்பம் வளர்ந்து உலகம் கைகளுக்குள் சுருங்கிய போதும் உலகெங்கும் வாழும் பெண்களின் பாதுகாப்பு பூரணப் படுத்தப்பட்டதா? அவர்களால் தனித்துவமாக வாழ முடிகிறதா? சுதந்திரமாக நடமாட முடிகிறதா? தாயாக, மகளாக, மனைவியாக, சகோதரியாக, தோழியாக, வழிகாட்டியாக, நலம் விரும்பியாக பல்வேறு உயிரோட்ட உணர்ச்சிகளின் கலவையாக பெண் இருந்த போதிலும் அவள் எத்தகைய சமூக பார்வையால் சுட்டெரிக்கப்படுகிறாள் என்பது நாளுக்கு நாள் நிகழும் சம்பவங்கள் நமக்கு கண்ணூடாகவே காட்சியாக மாறுகிறது. அதுவும் ஈழத்தில் வாழும் பெண்களின் வாழ்வியல் பக்கம் என்பது இருவேறாக நாங்கள் நோக்க வேண்டிய கடப்பாடுள்ள சமூகமாக இன்று தள்ளப்பட்டுள்ளோம்.

2009 காலப்பகுதிக்கு முன் கடல், தரை வான் என உயிர் தியாகங்களால் பெண்கள் ஈழத்தை நிறைத்திருந்த காலம். நடுச்சாம பொழுதுகளும் பெண்களுக்கு துணை நின்ற காலம். மண்ணை நேசித்தவர்களால் பெண்கள் புனிதமாக மதிக்கப்பட்டு வீரமறத்தியராய் உலவிய காலம். பெண்ணை தொட்டவருக்கு மரணம் என்ற காலம். கற்பழிப்புகள், பாலியல் சீண்டல்கள், சாதிய கொடுமைகள், சீதனக் கொடுமைகள் மலையேறிப்போன பொற்காலம். ஆங்காங்கே அங்கொன்றாய் இங்கொன்றாய் குடியால் பெண்கள் நெருக்கடிகளைச் சந்தித்திருந்தாலும் 100க்கு 95 வீதம் முழுப் பாதுகாப்பும் சுதந்திரமும் உணர்ந்த காலம். ஆணும் பெண்ணும் சமமாக களமும், பின் தளமும் பணிகளை செய்த புனிதமான காலம். இச்சை கொண்டு பெண்களை ஏறெடுக்காத காலம். இன்று பெண்கள் விண்ணில் பறந்து சாதனை படைக்கும் அளவுக்கு முன்னேறி இருந்தாலும் பதவிகளிலும் சரி, உழைப்பிலும் சரி ஆண் பெண் இருபாலரும் சரிசமமாக உலகம் முழுதும் வாழ்ந்தாலும் நாளுக்கு நாள் பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் பெண்களின் சுதந்திரத்தையும், பாதுகாப்பையும் கேள்விக்குறியாகிறது.

அடுத்தவர்களுக்காகவே அர்ப்பணிப்பு உணர்வோடு வாழ பிறந்த அவதாரம் பெண். இவ்வாறு சாதனை உயரத்தை எட்டி உள்ள மகளிர் சமுதாயத்திற்கு என்று ஒரு நாள் உலகெங்கும் ஒருங்கே கொண்டாடப்படுகிறது என்றால் அது தான் உலக மகளிர் தினம். ஆண்டு தோறும் மார்ச் மாதம் 8-ம் திகதி அன்று இந்த மகளிர் தினம் உலகெங்கும்

**தமிழ்மொழி**

கொண்டாடப்படுகிறது. ஐ.நா. சபையால் அறிவிக்கப்பட்ட இந்த நாளில் பல நாடுகளில் பொது விடுமுறை விடப்படுகிறது.

ஆணாதிக்க சமுதாயத்தில் இருந்து பெண்களுக்கான உரிமைகளை வென்றெடுத்த நாள் இது என்றே குறிப்பிடலாம். பெண்களுக்கான சமத்துவம், உரிமைகளை வலியுறுத்துவதற்காகவும் மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது. பெண்களின் மகத்துவம் போற்றும் இந்த தினம் எவ்வாறு உருவானது என்பதையும் முதலில் நாம் அறிய வேண்டும். 18-ம் நூற்றாண்டில் அமெரிக்காவில் தொழிற்சாலைகள் மற்றும் அலுவலகங்களில் ஆண்கள் மட்டுமே பணியாற்றினர். வீட்டுவேலைகளை செய்வதற்காக பெண்களை வீட்டுக்குள்ளேயே முடக்கி வைத்திருந்தனர். பெரும்பாலான பெண்களுக்கு ஆரம்ப கல்வி கூட தரப்படாமல் மறுக்கப்பட்டது.

1857-ம் ஆண்டு நிலக்கரி சுரங்கங்கள், தொழிற்சாலைகள், நிறுவனங்களில் பெண்களுக்கு பணி வாய்ப்பு தரப்பட்டது. பெண்களால் தொழிற்சாலைகளிலும் வேலை செய்ய முடியும் என்பது உலகுக்கு உணர்த்தப்பட்டது. ஆண்களுக்கு நிகராக பணியாற்ற வாய்ப்பு கிடைத்ததே தவிர, ஊதியத்தில் பெண்களுக்கு அநீதி இழைக்கப்பட்டது. இதனால் பெண்கள் மிகுந்த வருத்தம் அடைந்தனர். ஆண்களுக்கு இணையான ஊதியம், உரிமைகள் வழங்கக்கோரி குரல் எழுப்பினர். அப்போதைய அமெரிக்க அரசு இதற்கு செவி சாய்க்கவில்லை. இதனால் அமெரிக்கா முழுவதும் பெண் தொழிலாளர்கள் கிளர்ச்சியில் இறங்கினர். 1857-ம் ஆண்டு மார்ச் மாதம் 8-ம் திகதி இதற்கான போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த போராட்டத்தை அரசின் ஆதரவுடன் தொழிற்சாலைகளின் உரிமையாளர்கள் ஒடுக்கினர். அதன்பிறகு 1907-ம் ஆண்டு சம ஊதியம், சம உரிமை கேட்டு பெண்கள் போராட தொடங்கினர். 1910-ம் ஆண்டு டென்மார்க் நாட்டில், பெண்கள் உரிமை மாநாடு நடந்தது. இதில் உலகின் பல நாடுகளை சேர்ந்த பெண்களின் அமைப்புகள் கலந்து கொண்டு, தங்களது ஒற்றுமையை உலகிற்கு அவர்கள் காட்டினர். இந்த மாநாட்டில் கலந்து கொண்ட ஜெர்மனி கம்யூனிஸ்டு தலைவர் கிளாரே செர்கினே, மார்ச் மாதம் 8-ம்திகதியை மகளிர் தினமாக கொண்டாட வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்ற வலியுறுத்தினார். பல்வேறு தடங்கல்களால் இந்த தீர்மானம் நிறைவேறவில்லை.

1920-ம் ஆண்டு சோவியத் ரஷ்யாவில் செயிண்ட் பீட்டர்ஸ் நகரில் நடந்த பெண்களின் போராட்டத்தில் கலந்து கொண்ட ரஷ்யாவின் அலெக்ஸ்சாண்டிரா கெலன்ரா, ஆண்டுதோறும் மார்ச் மாதம் 8-ம் திகதி உலக மகளிர் தினத்தை கொண்டாட வேண்டும் என்று பிரகடனம் செய்தார். இதையடுத்து 1921-ம் ஆண்டு முதல் மார்ச் மாதம் 8-ம் திகதி உலக மகளிர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

சில நாடுகளில் பெண்களுக்கான சில உரிமைகள் நிறைவேற்றப்படுகிறது. ஆனால் 2009 பின் எமது தமிழ் கலாச்சார மரபியல் சில விதிமுறைகள் என்று ஒடுக்கு முறைகளை மீண்டும் கட்டவிழ்த்து விட்டுள்ளது.

சீதனம் இது பெரும் உளவியல் போராகவே பெண்கள் மத்தியில் காணப்படுகிறது. இதனால் மணவாழ்வு இன்றி தம் காலத்தை முடித்துக் கொள்ளும் பெண்களும் அதிகம் உண்டு. கணவனுக்கு பணிந்து பணிவிடை செய்ய வேண்டும் என்ற விதி இன்னும் கொடுமை. கணவன் மனைவி இருவரும் வேலைக்கு செல்பவர்களாக இருந்தால் வீட்டுப் பொறுப்பில் இருவருக்கும் பங்கீடு உண்டு. அனேகமாக வேலைக்கு செல்லும் பெண்கள் இரண்டு கடமைகளையும் சுமந்து வாழ்கிறார்கள்.

பாலியல் சுரண்டல்கள் என்பன குறைந்த பாடில்லை. எல்லாவற்றையும் விட வேலியே பயிரை மேய்ந்தால் வேற்று நாட்டவன் சும்மாவா விடுவான் நம்மை என்பது போல். காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளை தேடி அலைந்து உயிர்துறந்த பெண்களின் நிலை ஈழத்தில் பெரும் வலி நிறைந்தது.

வீரத்தோடு களத்திடை எதிரியை எதிர்த்த போராளிகளுக்கு இன்று எம்மவரிடம் தப்பித்து வாழ முடியாத பாலியல் சுரண்டல்கள். பத்து நூறாய் பிரிந்து கிடக்கும் எம்மினம் தப்பி வந்த பெண்போராளிகளை விலைபொருளாக்கி வேடிக்கை பார்க்க துடிக்கும் கொடுரக் காட்சிகள் வார்த்தைகளால் சொல்ல முடியாத துயர்.

இங்கு அனேகமானவர்கள் சமூகத்தால் குடும்பத்தால் ஒதுக்கப்பட்டு வாழ்கின்ற நிலை கூட அவர்களின் இந்த நிலைக்கு காரணமாகி விடுகிறது. தப்பித்து கொள்கை மாறாது வாழும் பெண்கள் இதற்கு விதி விலக்காக வாழ்கிறார்கள். உறவுகள் யாருமற்று தலைவரே தாயாய் மாறி வளர்த்த செஞ்சோலை பிள்ளைகளின் குடும்ப வாழ்க்கை மிகவும் மோசமானதாகவே ஈழத்தில் காணப்படுகிறது. அவர்கள் இருப்புக் காகவும் தங்கள் குழந்தைகளின் எதிர்காலத்திற்காகவும் உறவுகளை தேடி தவிக்கும் நிலையும் மனதை கசக்கி பிழிகிறது.

போதைக்கு அடிமையாகாது ஆண்களை பாதுகாத்த இனம் இன்று பெண்பிள்ளைகளை போதையில் இருந்து மீட்க போராடும் கொடிய நிலை இருக்கும் போது இதில் நாம் மகளீர் தினத்தில் என்ன செய்தியை சொல்லப் போகின்றோம். பெண்களின் சுயமரியாதை, நடத்தையை முன் நிறுத்தி பெண்களை நடைப்பிணமாக மாற்றும் நிலையும் இன்னும் மாறவில்லை. பெண்ணியம் இங்கு கேள்வியாகி நிற்கிறது.

ஒவ்வொரு மகளீர் தினமும் ஒரு மாற்றத்தை கொண்டு வர வேண்டும். பெண்களை பாதுகாக்கும் புதிய சட்ட மூலங்களைக் கொண்டு வரவேண்டும்.உலகிலேயே மகளிருக்கு அதிக மரியாதை வழங்கும் சமுதாயம் தமிழ் சமுதாயம். பெண்களை கடவுளுக்கு மேலாக வைத்து வழிபடுவதும் தமிழ் சமுதாயமே. மனித நாகரிகம் வளர காரணமான மகளிரின் முன்னேற்றம் குறித்த அனைத்து இலக்குகளையும் எட்ட மகளிர் உரிமை வென்றெடுக்கப்பட இந்த நாளில் நாம் அனைவரும் உறுதி ஏற்போம். இந்த நன்னாளில் மகளிர் தின வாழ்த்துக்களை கூறும் நாம் முழுமையான சுதந்திரத்தை உணர வேண்டும்.

• • •

## ஈரான், அமரிக்க ... தொடர்ச்சி...

ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை இந்த உலக நாடுகளின் போரில், எந்த நாடு நல்லது எந்தநாடு கெட்டது என்ற கருத்துக்களைக் கூற வேண்டிய அவசியமில்லை.

இந்த இருநாடுகள் மோதலில் அமெரிக்காவுக்கு ஆதரவாக இஸ்ரேல்,மத்தியகிழ்கு உட்பட சிலநாடுகளும் , ஈரானுக்கு ஆதரவாக சீனா, ரஷ்யா உட்பட சிலநாடுகளும் உள்ளன.

இலங்கையில் உள்ள சிங்கள, முஸ்லிம் தலைவர்கள் பலர் ஈரானுக்கு ஆதரவாகவும், அமரிக்கா, இஸ்ரேலுக்கு எதிராகவும் கருத்துக்களை கூறியுள்ளனர்.

குறிப்பாக முன்னாள் ஜனாதிபதிகளான இனப்படுகொலையாளர்களான மகிந்த, ரணில், மற்றும் மகிந்தவின் மகன் நாமல் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம், இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிசாத் பதியுதீன் இப்படி சிலரை பார்க்கலாம்.

ஈரான் தலைவர்களின் மறைவுக்கு இலங்கை அரசு அதிகாரப்பூர்வ அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ இரங்கல் தெரிவித்தார். ஜனாதிபதி அநுர இதுவரை எந்த கருத்தும் கூறவில்லை.

இந்த உலக வல்லரசுகளின் போர் தொடர்பாக ஈழத்தமிழர்கள் அறியவேண்டியது, அல்லது சிந்திக்க வேண்டியது கடந்த 2006 தொடக்கம் இறுதி யுத்த காலத்தில் 2009 மே18 வரை இலங்கைக்கு ஆதரவாக முள்ளிவாய்க்கால் இறுதியுத்தத்தில் இனப்படுகொலைக்கு உதவிய முக்கிய நாடுகளே எதிரும் புதிருமாக மோதி வருகின்றனர்.

இதில் எந்த நாடுகளும் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக செயல்படவில்லை, மாறாக இராணுவ, போர்தளபாட, விமான, தடைசெய்யப்பட்ட குண்டுகள், போரியல் திட்டங்களில் எல்லாமே இலங்கை அரசுக்கு ஆதரவாக செயல்பட்ட நாடுகள்தான்.

ஈழத்தில் நடந்த இறுதிப்போர் காலத்தில் இந்தியா ,பாகிஸ்தான்,சீனா,இஸ்ரேல்,அமெரிக்கா,லண்டன்,ரஷ்யா,ஈரான்,உக்ரைன், செக்குடியரசு,மத்தியகிழக்கு நாடுகள் உட்பட பல நாடுகள் இலங்கை அரசின் இனப்படுகொலைக்கு உதவிய நாடுகள்தான்.

இன்று தமக்குள் மோதி அவர்களும் அவர்களுடைய பொருளாதார வழங்களும் அழிந்துகொண்டிருக்கின்றன. சர்வதேச நீதிமன்றம், ஐ. நா சபை ஈழத்தமிழர்களுக்கு இதுவரை எந்த நீதியையும் வழங்க மறுக்கின்றது. இன்று அவர்களுக்குள்ளே நீதியையும், தண்டனைகளையும் இறைவனால் வழங்கப்பட்டுக்கொண்டு இருக்கின்றது என்பதைத் தான் கூறமுடிகிறது.

இதேவேளை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 61 ஆவது கூட்டத்தொடர் கடந்த மாதம்(23/02/2026) ஜெனிவாவில் ஆரம்பமாகியுள்ளது.

ஜெனீவாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிட பிரதிநிதி சுமித் தசநாயக்க தலைமையிலான குழுவினர் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 61 ஆவது கூட்டத்தொடரில் பங்கேற்கவுள்ளனர்.

இன்று முதல் எதிர்வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரை ஜெனீவா நகரில் இந்த கூட்டத்தொடர் நடைபெறவுள்ளது. உலகளாவிய ரீதியில் மனித உரிமைகளின் நிலைப்பாடு மற்றும் சிவில் அரசியல் பொருளாதார உரிமைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளது.

தற்போதைய ஈரான், அமரிக்க மோதலால் இந்த கூட்டத்தொடரில் ஈழத்தமிழர்களின் இனப்படுகொலை விடயம் முதன்மைப்படுத்தப்படுவதும் தாமதமாகலாம் என்பதும் உண்மை.

• • •

# வட்டுக்கோட்டை தீர்மானத்தால் வடகிழக்கில் தெரிவான பாராளுமன்ற உறுப்பினர்கள் எதையுமே சாதிக்கவில்லை.!

பா.அரியநேத்திரன்

1976 மே 14 ல் வட்டுக்கோட்டை தீர்மானத்துக்கு அங்கீகாரம் பெறப்பட்ட தொகுதி வாரியிலான பொதுத்தேர்தல் 1977 ஜூலை 21ல் வெற்றி பெற்ற தமிழர் விடுதலை கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்கள் 18 பேர்: (23 தொகுதிகளில் 421,488, வாக்குகள் கிடைத்தன)

**1.காங்கேசன்துறை, அ.அமிர்தலிங்கம்**
**2.யாழ்ப்பாணம், வி.யோகேஷ்வரன்**
**3. நல்லூர், மு.சிதம்பரம்**
**4.ஊர்காவல்துறை, க.பொ.இரத்தினம்**
**5.வட்டுக்கோட்டை, தா.திருசாவுக்கரசு**
**6.கோப்பாய், சி.கதிரவேற்பிள்ளை**
**7. உடுவில், மு.தர்மலிங்கம்**
**8. உடுப்பிட்டி,த.இராசலிங்கம்**
**9.பருத்தித்துரை, கே.துரைரெட்ணம்**
**10.சாவகச்சேரி, வி.என்.நவரெட்ணம்**
**11. கிளிநொச்சி, வீ.ஆனந்தசங்கரி**
**12.முல்லைத்தீவு, எக்ஷ்.எம்.செல்லத்தம்பி**
**13. மன்னார்,பீ.ஏ.சுசைதாசன்**
**14. வவுனியா,தா.சிவசிதம்பரம்**
**15. திருகோணமலை, இரா.சம்மந்தன்**
**16.மட்டக்களப்பு, செ.இராசதுரை**
**17. பட்டிருப்பு, பூ.கணேசலிங்கம்**
**18. பொத்துவில், எம். கனகரெத்தினம்**

வடகிழக்கில் 23 தொகுதிகளில் 23,வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டனர் .உண்மையில் 22 தொகுதிகளில் மட்டுமே வடகிழக்கில் வேட்பாளர்களை இறக்கியிருக்க வேண்டும்.

மட்டக்களப்பு இரட்டை அங்கத்தவர் தொகுதியில் தமிழர் விடுதலை கூட்டணி உதயசூரியன் சின்னத்தில் செல்லையா இராசதுரையும், இலங்கைத்தமிழ் அரசுக்கட்சி வீட்டுச்சின்னத்தில் காசி ஆனந்தனும் வேட்பாளர்களாக நியமிக்கப்பட்டபோதும் காசி ஆனந்தன் தோல்வியடைந்தார்.

இதில் தமிழரசுகட்சி, தமிழர் விடுதலைக்கூட்டணி இணைந்த தலைமை (தலைவர் அ.அமிர்தலிங்கம்) இரண்டு தவறுகளை செய்தது.

1) மட்டக்களப்பு தொகுதியில் 1956 தொடக்கம்1977 வரை 21 வருடங்களாக பாராளுமன்ற உறுப்பினராக வெற்றிபெற்ற செல்லையா இராசதுரையை தோல்வியடைய வைப் பதற்காக காசி ஆனந்தனையும் வேட்பாளராக இறக்கியது முதல் தவறு.

2) மட்டக்களப்பு இரட்டை அங்கத்தவர் தொகுதிக்கான காரணம் ஒரு தமிழரும், ஒரு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினரும் தெரிவு செய்யப்படவேண்டும் என்பற்காகவே இரட்டை தொகுதி. ஆனால் முஸ்லிம் பிரதிநித்துவத்தை தட்டிப்பறிக்க இரண்டு தமிழர்களை வேட்பாளர்களாக நியமித்தது இரண்டாவது தவறு.

இதன் தாக்கம் கல்முனை, சம்மாந்துறை, மூதூர் ஆகிய தொகுதிகளில் வேட்பாளர்களாக நியமித்த மூன்று முஸ்லிம் வேட்பாளர்களும் தோல்வியடைந்தனர்.

குறிப்பாக ஐக்கிய தேசிய கட்சியால் மட்டக்களப்பு இரட்டை அங்கத்தவர் தொகுதியில் முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை தட்டிப்பறிக்கும் தமிழர் விடுதலை கூட்ட ணியை முஸ்லிம் மக்கள் தோற்கடிக்கவேண்டும் என்ற பிரசாரம் செய்யப்பட்டதால்.

கல்முனை-ஏ.எம்.சம்சுதீன்.
சம்மாந்துறை-எச்.எல்.எம்.ஹாசீம்.
மூதூர்-எஷ் .எம்.மக்கீன்.

ஆகிய மூவரும் தோல்வியடைந்தனர்.

வட்டுக்கோட்டை தீர்மானத்தால் தெரிவுசெய்யப் பட்ட 18 பாராளுமன்ற உறுப்பினர்கள் எவருமே வட்டுக் கோட்டை தீர்மானத்தை முதன்மைபடுத்தி இலங்கையிலோ, சர்வதேசத்திலோ அரசியல் செய்யவில்லை என்பதே உண்மை.

1977 தேர்தல் மேடைகளில் பிரசாரப்பீரங்கியாக செயல்பட்டதில் முக்கியமானவர் கல்முனை சட்டத்தரணி முகம்மது ஹுசைன் முகம்மது அஷ்ரப்.

இவர் உரையாற்றும்போது" தந்தை செல்வா நிறைவேற்றிய தமிழீழத்தை அவரால் பெறுவதற்கு முன்னம் இறந்துவிட்டார் அவர் நிறைவேற்றிய தமிழீழத்தை நான் பெற்றுத்தருவேன்"

இப்படி பேசிய அஷ்ரப்பால் அவருடைய கல்முனை தொகுதியில் கூட ஒரு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினரை வெற்றிபெற வைக்கமுடியவில்லை.

1977 தேர்தலுக்கு பின்னர் தமிழர் விடுதலை கூட்டணி முஸ்லிம் சமூகத்தை புறக்கணித்தது என்ற கருத்தை அஷ்ரப் உணர்ந்து தமது சமூகத்துக்கு தனியான ஒரு அரசியல் கட்சி தேவை என கூறி 1980களில் அஷ்ரபினால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒரு சமூக மேம்பாட்டுக்கான இயக்கமாக காத்தான்குடியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பின்னர் அரசியல் கட்சியாக 1981 தேர்தல் திணைக்களத்தில் அரசியல் கட்சியாக பதியப்பட்டது...!

தமிழர் விடுதலை கூட்டணி தலைவர் அப்பாப் பிள்ளை அமிர்தலிங்கம் விட்ட தவறுகளில் இவைகளும் அடங்கும். இது தற்போதைய இளைஞர்களுக்கு தெரியாது என்பதால் இந்த பதிவு..!

1977 ல் கல்குடா தொகுதியில் தமிழர் விடுதலை கூட்டணி வேட்பாளர் சம்மந்தமூர்த்தி தோல்வியடைந்து ஐக்கிய தேசிய கட்சி வேட்பாளர் K. W. தேவநாயம் வெற்றி பெற்றார். வடகிழக்கில் ஒரேயொரு தமிழ் தொகுதியான கல்குடாவில் தமிழர் விடுதலை கூட்டணி வேட்பாளரை தோற்கடித்தமைக்காக ஜே ஆர் ஜெயவர்தன தேவநாயகத்தை பாராட்டி நீதி அமைச்சர் பதவியை வழங்கிவைத்தார். அதே தேவநாயகத்தை கொண்டு 1979 ஜூலை19 ல் பயங்கரவாத்தடைச்சட்டத்தை சமர்பித்துநிறைவேற்றி சரியாக 07 மாதங்களால் 1980 பெப்ரவரியில் நீதி அமைச்சு பதவி தேவநாயகத்திடம் இருந்து பறித்து அவருக்கு உள்ளூராட்சி அமைச்சு வழங்கப்பட்டது.

பயங்கரவாத தடைச்சட்டம் நிறைவேற்றுவதற்கு மட்டுமே தேவநாயகத்துக்கு ஜே ஆர் ஜெயவர்தன நீதி அமைச்சு பதவி வழங்கியிருந்தார் என்பதே உண்மை.

தமிழனைக்கொண்டு தமிழரை அடக்கவே அன்று 1979 ல் பயங்கரவாத தடைச்சட்டம் நிறைவேற்றப்பட்டது

## இந்தியப் பெருங்கடலில்... தொடர்ச்சி...

இந்தியாவுக்குப் பெரும் கவலையை அளித்துள்ளது. இந்தியாவின் அழைப்பின் பேரில் வந்த கப்பல்கள் அதன் அண்டையிலேயே தாக்கப்பட்டிருப்பது, எதிர்கால சர்வதேச கூட்டுப் பயிற்சிகளின் நம்பகத்தன்மையைக் கேள்விக் குறியாக்கியுள்ளது.

மறுபுறம், ஈரானின் இரண்டாவது கப்பலான ஐஆர்ஜஎஸ் புஷேர் எதிர்கொண்ட சிக்கல் இலங்கையின் தேசிய பாதுகாப்புச் சபையை அவசரமாகக் கூட்ட வைத்தது. டேனா தகர்க்கப்பட்ட சில மணித்தியாலங்களிலேயே, இயந்திரக் கோளாறு காரணமாக புஷேர் கப்பல் அவசர உதவி கோரியது.

இந்த இக்கட்டான நிலையில், 11 மணிநேர நீண்ட விவாதங்களுக்குப் பின்னரே மனிதாபிமான அடிப்படையில் மீட்பு நடவடிக்கைக்கு இலங்கை அனுமதி அளித்தது.

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், இஸ்ரேல் மற்றும் ஈரான் ஆகிய இரு நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களுடன் ஒரே நேரத்தில் பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டார். இறுதியில், புஷேர் கப்பலில் இருந்த 208 மாலுமிகள் வெலிசறை கடற்படை முகாமில் தங்கவைக்கப்பட்டனர்.

மூன்றாவது கப்பலான ஐஆர்ஜஎஸ் லவான், கேரளாவின் கொச்சி துறைமுகத்தைச் சென்றடைந்திருப்பது இந்த மர்மமான சூழலில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. 80 பேர் கொண்ட அந்தக் கப்பலில் 183 பேர் இருந்ததாகக் கூறப்படுவது, டேனா கப்பலில் இருந்து தப்பியவர்களை லவான் மீட்டிருக்கலாம் என்ற யூகத்தை ஏற்படுத்துகிறது.

இந்திய மண்ணில் ஈரானிய வீரர்கள் தஞ்சம் புகுந்திருப்பது, தெற்காசிய பிராந்தியத்தில் இந்தியா வகிக்கும் சமநிலைப்படுத்தும் பாத்திரத்தை மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ளது. ஆனால் அடுத்தகட்டமாக இந்தியாவின் நகர்வு இப்போது உன்னிப்பாக அவதானிக்க வேண்டியுள்ளதாக உள்ளது.

ஏனென்றால் தனது அழைப்பில் வருகை தந்திருந்த ஈரானிய கப்பல்களை இந்தியா பாதுகாப்பாக அனுப்பி வைத்திருக்க வேண்டும் என்ற வாதம் இப்போது தீவிரமாகியுள்ள நிலையில் இந்தியா சர்வதேச கடற்பரப்புக்குள் பிரவேசித்து விட்டால் இந்தியாவால் பாதுகாப்பை வழங்க முடியாது என்று பதிலளித்துள்ளது.

இதேநேரம் ஐஆர்ஜஎஸ் டேனாவின் தாக்கியழிப்புச் சம்பவம் இலங்கையின் இறையாண்மை மற்றும் பாதுகாப்புத் தன்னாதிக்கம் குறித்த பல கேள்விகளை எழுப்பியுள்ளது. போர் தொடங்குவதற்கு 12 நாட்களுக்கு முன்னதாக அமெரிக்க பசிபிக் தளபதி அட்மிரல் ஸ்டீபன் கோஹ்லர் இலங்கைக்கு விஜயம் செய்தமை, தற்செயலான நிகழ்வா அல்லது திட்டமிடப்பட்ட வியூகமா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேலும், அமெரிக்கா இலங்கைக்கு வழங்கிய ஆழ்கடல் கண்காணிப்பு ரேடர்களும், கப்பல்களும் விமானங்களும் இலங்கையின் பாதுகாப்பிற்காகவா அல்லது அமெரிக்காவின் தேவைகளை நிறைவு செய்யவா என்ற விவாதமும் எழுந்துள்ளது.

இலங்கை தனது நட்பு நாடொன்றின் கப்பல்களுக்கு அனுமதி வழங்குவதில் காட்டிய தாமதம், பாரிய உயிர்ச்சேதத்திற்கு மறைமுகக் காரணமாகிவிட்டது என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்படுகின்றது. குறிப்பாக, எதிர்க்கட்சி உறுப்பினர்களான முஜிபுர் ரஹ்மான் மற்றும் விமல் வீரவன்ச போன்றோர் இந்தத் தாமதத்தைச் சுட்டிக்காட்டி அரசாங்கத்தின் இராஜதந்திர பலவீனத்தைக் கடுமையாக விமர்சித்து வருகின்றனர்.

ஈரான் மீதான போர் அமெரிக்க, இஸ்ரேலிய கூட்டுப்போர் இலங்கையின் வாசலில் வந்து நிற்கிறது. இந்தியப் பெருங்கடலில் அமெரிக்கா புதிய போர்முனையைத் திறந்துள்ளது. இந்நிலையில், இலங்கை தவிர்க்க முடியாதபடி வல்லரசுப் போட்டிக்குள் வலுவாகச் சிக்கியுள்ளது.

நடுநிலை நாடு என்று தன்னைத் தொடர்ந்து கூறிக்கொள்ளும் இலங்கைக்கு, ஐஆர்ஜஎஸ் டேனாவின் மூழ்கடிப்பு கசப்பான பாடமாகும். அந்தப் புரிதல் இன்னமும் இலங்கைக்கு ஏற்படவில்லை.

தற்போது கடற்படை வீரர்களின் உடல்களைப் பொறுப்பேற்பதில் ஈரான் ஆர்வம் காட்டி வருகிறது. உயிருடன் தங்கவைக்கப்பட்டுள்ள 240 கடற்படை வீரர்களை மீண்டும் உயிருடன் நாட்டுக்கு அழைத்துச் செல்வதற்கும் ஈரான் அதிகம் விரும்புகிறது.

இப்போர்ச் சூழலில் அவர்கள் எவ்வாறு தாயகம் திரும்புவார்கள் என்பதும், எஞ்சியுள்ள கப்பல்கள் சர்வதேச கடற்பரப்பை எப்படிக் கடக்கும் என்பதும் தற்போதைய மிகப்பெரிய கேள்வியாகும். இந்தியப் பெருங்கடல் இனி அமைதிப் பிராந்தியமாக இருக்குமா அல்லது வல்லரசுகளின் நேரடி மோதல் களமாக மாறுமா என்பது ஈரானிய கப்பல்களினதும், கடற்படை வீரர்களினதும் பாதுகாப்பான மீள் திரும்பலில் தான் தங்கியுள்ளது.

• • •

# தமிழ் சட்டத்தரணிகள் பேரவை
# Tamil Lawyers Forum

## தமிழ் சட்டத்தரணிகள் பேரவையின் ஒருங்கிணைப்பின் கீழ் புதிய அரசியலமைப்பு தொடர்பில் தமிழ்த்தேசிய கட்சிகளுக்கிடையிலான இணக்கப்பாடு

தமிழ் சட்டத்தரணிகள் பேரவையினால் 02.03.2026 அன்று கொழும்பில் வடக்கு கிழக்கு மாகாணங்களை உறுப்பினர்கள் மற்றும் அரசியலமைப்பு ஆக்க பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தமிழ் கட்சிகளின் பாராளுமன்ற அக் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் நடாத்தப்பட்ட புதிய முயற்சிகள் தொடர்பான கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களில் இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது:

1. தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு நிலையான தீர்வை எட்டும் நோக்கில் தமிழ் மக்களின் இறைமை மற்றும் சுயநிர்ணய உரிமை போன்ற தமிழ் மக்களின் அபிலாஷைகளை அரசியலமைப்பொன்றே உள்ளடக்கிய அவசியமானது சமஷ்டி என்ற முறையிலான பொதுத்தீர்மானத்தை ஏற்றுக்கொண்டு, அவ்வாறான சமஷ்டி முறையிலான அரசியலமைப்புக்கான சமூக ஒப்பந்தத்தமொன்றை தமிழ் மற்றும் மேற்கொள்வதற்கான வரைபு ஒன்றினைதயாரித்தல்: சிங்கள மக்களுக்கிடையில்

2. புதிய அரசியலமைப்பினுள் உள்ளடக்கப்பட வேண்டிய சமஷ்டிக்கான அடிப்படை அம்சங்களினை உள்ளடக்கிய விரிவான அரசியலமைப்பு வரைபு ஒன்றினைத் தயாரித்தல்:

3. பங்குபற்றிய கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களும் கட்சிப் பிரதிநிதிகளும் புதிய அரசியலமைப்பு தொடர்பில் மேற்குறித்த உடன்பட்ட விடயங்களில் தொடர்ந்து ஒன்றாகச் செயற்படுவது எனவும்,இந்த சந்திப்பு இடம்பெற்ற 02.03.2026 திகதியிலிருந்து தமிழரின் இனப்பிரச்சனைக்கான அரசாங்கத்தினால் விடயங்கள் தொடர்பாகவும், இலங்கை அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பான எந்தவிதமான கலந்துரையாடல்களிலும் தனித்தும், கட்சி அடிப்படையிலும் செயற்படுவதில்லை எனவும் உடன்பாட்டுக்கு வந்ததுடன்:

மேற்குறித்த இணக்கப்பாடுகளுக்கமைவாகத் தமிழ் சட்டத்தரணிகள் பேரவைக்கும், தமிழ் அரசியல்கட்சிகளுக்கும் இடையிலானஅரசியலமைப்புதொடர்பானசெயற்பாடுகள் பல கட்டங்களுடாக மேலும் முன்னெடுக்கப்படும் எனவும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**2ம் திகதி பெப்ரவரி,2026**

**இப்படிக்கு,**

**தமிழ் சட்டத்தரணிகள் பேரவை ஒருங்கிணைப்பாளர்கள்**


க.ச.இரத்தினவேல் - சட்டத்தரணி
வி. புவிதரன் ஜனாதிபதி சட்டத்தரணி
பேராசிரியர் அ. சர்வேஸ்வரன்
சுகந்தி இராஜகுலேந்திரா சட்டத்தரணி
வ.ச.நிறைஞ்சன் -சட்டத்தரணி
ஞா.கா.ரனித்தா சட்டத்தரணி
ம.யூட் டினேஷ் -சட்டத்தரணி



# 52% ஏற்றுமதிக்கு ஆபத்து! இலங்கைத் தேயிலைத் துறையை முடக்கும் மத்திய கிழக்கு போர்

மருதன் ராம்

இலங்கையின் பொருளாதார முதுகெலும்பாகத் திகழும் தேயிலைத்துறை, தற்சமயம் ஒரு பாரிய சர்வதேச நெருக்கடியைச் சந்திக்கக் கூடும் என்று அச்சம் உருவாகியுள்ளது. தற்போது மத்திய கிழக்கில், குறிப்பாக ஈரான், இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு இடையே தீவிரமடைந்துள்ள மோதல்கள், இலங்கையின் 'சிலோன் டீ' (Ceylon Tea) வர்த்தகத்தில் கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளன.



புவியியல் ரீதியாக இலங்கை இப்போரில் நேரடியாக ஈடுபடாவிட்டாலும், உலகளாவிய விநியோகச் சங்கிலி மற்றும் எரிசக்தி சந்தை ஊடாக இலங்கை மிக மோசமான பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளது. இலங்கை தேயிலை ஏற்றுமதியில் மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க பிராந்தியங்கள் மிக முக்கியமான பங்கைக் கொண்டுள்ளன.



தேசிய தேயிலை தோட்ட கம்பெனிகளின் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சமன் கீகனகே வெளியிட்டுள்ள தரவுகளின்படி 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் இலங்கையின் மொத்த தேயிலை உற்பத்தி யில் 52% மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க நாடுகளுக்கே ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இலங்கை யின் மொத்த வருடாந்த உற்பத்தி சுமார் 256 மில்லியன் கிலோகிராம் ஆகும்.



இதில் பாதியளவு ஒரு குறிப்பிட்ட பிராந்தியத்தைச் சார்ந்து இருப்பது, தற்போதைய போரினால் ஏற்படும் பாதிப்பின் தீவிரத்தை உணர்த்துகிறது. நாட்டின் மொத்த உற்பத்தியில் 65% சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களால் வழங்கப்படுகிறது. இப்போரினால் இவர்களின் வாழ் வாதாரமே தற்போது கேள்விக்குறியாகியுள்ளது.

2025 ஆம் ஆண்டில் சுமார் 43 மில்லியன் கிலோகிராம் தேயிலையை இறக்குமதி செய்த 10 முக்கிய சந்தைகள் தற்போதைய மோதலால் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளன. ஒட்டுமொத்தமாக 70% ஏற்றுமதி வாய்ப்புகள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன. குறிப்பாக இலங்கைக்கும் ஈரானுக்கும் இடையிலான வர்த்தக உறவில் 'பண்டமாற்று' முறை ஒரு முக்கிய அங்கமாகும். குறிப்பாக, ஈரானிடம் இருந்து பெற்ற எரிபொருள் கடனுக்காக தேயிலையை வழங்கும் ஒப்பந்தம் சர்வதேச சந்தையில் இலங்கை தேயிலையின் விலையை நிலையாக வைத்திருக்க உதவியது.

தற்போதைய போர் சூழலால் இந்த ஒப்பந்தம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக இலங்கை தேயிலைத் தோட்ட கம்பெனிகளின் உரிமையாளர் தரப்பு தெரிவிக்கின்றது. இது இலங்கைத் தேயிலைக்கான போட்டித் தன்மை மிக்க விலையை இழக்கச் செய்துள்ளதுடன், ஈரான் போன்ற ஒரு பாரிய கொள்வனவாளரை இலங்கை இழக்கும் அபாயத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள பதற்றம் உலகளா விய கடல்சார் வர்த்தகப் பாதைகளில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. பாரசீக வளைகுடாவின் முக்கிய நுழை வாயிலான ஹார்முஸ் நீரிணையில் ஏற்பட்டுள்ள பதற்றம் காரணமாக, கப்பல் போக்குவரத்து கடுமையாகக் குறைந்துள் ளது. ஐரோப்பா மற்றும் வட அமெரிக்கா செல்லும் கப்பல் கள் சுயஸ் கால்வாயைத் தவிர்த்து, ஆபிரிக்காவின் 'நன்னம்பிக்கை முனையை' (Cape of Good Hope) சுற்றிச் செல்கின்றன. இதனால் பயண நேரம் அதிகரிப்பதோடு, எரிபொருள் செலவும் உயர்ந்துள்ளது.


காப்புறுதி நிறுவனங்கள் மத்திய கிழக்கு பிராந் தியத்திற்கான காப்புறுதி கட்டமைப்புகளை பன்மடங்கு உயர்த்தியுள்ளன. சில நிறுவனங்கள் சேவைகளையே நிறுத்தியுள்ளன. இது ஏற்றுமதியாளர்களுக்கு மேலதிக நிதிச் சுமையை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறான நிலை இலங்கை யின் தேயிலை சந்தையை கேள்விக்குள்ளாகியுள்ளது.

## கொழும்பு தேயிலை ஏல விற்பனையில் ஏற்பட்டுள்ள சரிவு

2026 பெப்ரவரி மற்றும் மார்ச் மாத தரவுகள் தேயிலை சந்தையின் மந்தநிலையைத் தெளிவாகக் காட்டுகின்றன. கடந்த பெப்ரவரி மாதத்தில் தேசிய தேயிலை ஏல சராசரி விலை ஒரு கிலோவிற்கு 1,152.11 ரூபாவாகக் குறைந்ததாக சந்தை தரவுகள் தெரிவிக்கின்றன.

இது கடந்த ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் 12.43 ரூபா சரிவாகும். மத்திய கிழக்கு நாடுகளுக்கு அதிகம் ஏற்றுமதி செய்யப்படும் தாழ் நிலத் தேயிலை விலை ஜனவரியை விட பெப்ரவரி மாதத்தில் ஒரு கிலோவிற்கு 26.38 ரூபாவால் சரிவைச் சந்தித்துள்ளது.

அதேபோன்று மத்திய நிலத் தேயிலையும் கணிசமான சரிவைச் சந்தித்துள்ளது. தரமான பாரம்பரிய தேயிலை என்று கூறப்படும் மலைநாட்டு தேயிலைக்கான தேவை காரணமாக இந்த வகை மட்டும் ஓரளவு ஸ்திரத் தன்மையைப் பேணுவதாக ஏல விற்பனை தரகர்கள் கூறுகின்றனர்.



இவ்வாறு தேயிலையின் விலை சரிவடைந்து செல்லும் போக்கு நிலவுகின்ற அதே சூழலில் மறுபுறம் ஏல விற்பனையில் விற்பனையாகாத தேயிலை யின் அளவு 15-18% ஆக அதிகரித்துள்ளது. இது தேயிலை தொழிற்சாலைக ளின் பணப்புழக்கத்தைப் பாதித்துள்ளதாக தேயிலைத் தோட்ட தொழிற்சாலை உரிமையாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

தேயிலைத் துறையில் ஏற்பட்டுள்ள முடக்கம் நேரடியாக காணக்கூடிய தாக்கத்தை இதுவரையில் ஏற்படுத்தாவிட்டாலும் ஒரு சங்கிலித் தொடர் அடிப்படை யில் விளைவை ஏற்படுத்த தொடங்கியுள்ளது. இதனடிப் படையில் குறைந்த ஏல விலை மற்றும் போதிய ஏற்றுமதி வாய்ப்பின்மை காரணமாக, சிறு தோட்ட விவசாயிகளுக்கு வழங்கப்படும் 'கொழுந்து கிலோ ஒன்றுக்கான விலை' குறைக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் ஏப்ரல் மாதத்தில் சித்திரை புத்தாண்டு

தொடர்ச்சி: பக்கம் 12

வாராந்த மின்னிதழ் | இதழ் 381 | இந்தியத்தளம்
சனி, 07 மார்ச், 2026 | பக்கம் 11

# ஈரான் மீது போர்:
# அனைத்துலகக் கொலையும் கொள்ளையுமாக அமெரிக்க, இசுரேல் வன்கொடு அரசியல்

சோவியத்து வீழ்ச்சிக்குப் பின் இந்தப் புவிக்கோளம் அரசியலில் ஒருதுருவ உலகமாகி விட்டதாக புவிசார் அரசியல் விற்பன்னர்கள் அறிவித்துக் கொண்டனர். புவியியலில் மட்டுமன்று, அரசியலிலும் 'ஒருதுருவ உலகம்' வெற்று மாயைதான்! தொடர்ந்து மாறிவரும் உலகில் அதனால் நிலைத்து நீடிக்க முடியாது என்பதை காலம் வெகுவிரைவில் உணர்த்திற்று. சீனத்தின் பாய்ச்சல் வேக வளர்ச்சி அதனை அமெரிக்காவுக்குப் போட்டியான பொருளியல் வல்லரசாக நிலைநிறுத்தி வருகிறது. இலத்தீன் அமெரிக்க நாடுகளின் தன்னாட்சி வேட்கையும், ஐரோப்பிய வல்லரசுகள் வட அமெரிக்க வல்லரசுக்கு முழுக்கக் கட்டுப்பட மறுப்பதும், பாலத்தீனம் உள்ளிட்ட ஒடுக்குண்ட தேசங்களின் தன்னுரிமைப் போராட்டமும் அமெரிக்காவின் ஒற்றைத்துருவ அரசியலைப் பலதிறப்பட்ட ஆற்றல்களின் பலதுருவ அரசியலால் மாற்றீடு செய்து வருகின்றன.



இந்த மாற்றத்தை அமெரிக்க ஆளும் வகுப்பினால் சகித்துக் கொள்ள முடியவில்லை. இந்தச் சகிப்பின்மையின் வெளிப்பாடுதான் தொனால்டு துரும்ப்பின் சண்டியத் தனமான சதிராட்டம்!

தொனால்டு துரும்ப் இரண்டாம் முறை அதிபர் தேர்தலில் போட்டியிட்ட போது கொடுத்த முதன்மையான வாக்குறுதிகளில் ஒன்று: அமெரிக்காவின் முடிவில்லாத போர்களுக்கு முடிவு காண்பேன் என்பதாகும். உருசியா-உக்ரைன் போருக்கு முடிவு காண்பதாகச் சொல்லி விளாதிமிர் புத்தினுக்கு ஆசை காட்டிப் பார்த்தார். உக்ரைனிய ஜெலன்ஸ்கியின் கையை முறுக்கிப் பார்த்தார். எதுவும் பலிக்கவில்லை.

பாலத்தின மக்களை இனவழிப்புச் செய்யும் இசுரேலின் காசா போருக்கு முழுமையாக முட்டுக் கொடுத்துத்தான் துரும்ப் அந்தப் போருக்கு முடிவு கட்டினார். பாலத்தின இனவழிப்புக்கு மட்டுமல்லாமல், சீனத்தையும் உருசியாவையும் கட்டுப்படுத்தி வைக்கவும் கூட ஈரானை வீழ்த்த வேண்டும் என்பது அமெரிக்க வல்லரசின் கணக்கு. ஈரானை வீழ்த்துவது சயோனிச இசுரேலின் விரிவாதிக்க நலனுக்கும், அமெரிக்க வல்லரசின் எரிபொருள்சார் வணிக நலனுக்கும் தேவைப்படுகிறது.

பிப்ரவரி 28ஆம் நாள் அமெரிக்காவும் இசுரேலும் ஈரான் மீது முழுவீச்சில் போர் தொடுத்து ஈரானின் உச்சத் தலைவர் அயதுல்லா அலி கமேனியைப் படுகொலை செய்தன. ஈரான் மீது போர் தொடுப்பதற்கு துரும்ப்பும் நெதன்யாகுவும் சொல்லக் கூடிய காரணங்கள்:

**1) ஈரான் அணுவாய்தம் செய்யக் கூடிய நிலையில் உள்ளது;**

**2) நடுக்கிழக்கு வட்டாரத்தில் திகிலிய (பயங்கரவாத) அமைப்புகளுக்குத் துணை செய்கிறது;**

**3) ஈரானிய அரசு அந்நாட்டு மக்களை அடிமைகளாக ஒடுக்கி வைத்திருப்பதால், அங்கு ஆட்சி மாற்றம் தேவைப்படுகிறது.**



இந்தக் காரணங்கள் எல்லாம் உண்மை என்று வைத்துக் கொண்டாலும் இறைமை கொண்ட ஒரு நாட்டின் மீது இரு அயல் அரசுகள் இவ்வாறு போர் தொடுப்பதற்குப் பன்னாட்டுச் சட்ட முறையில் இடமில்லை.


முதலாவதாக, உலகில் மிகப் பெரிய அளவில் அணுவாய்தங்களைக் குவித்து வைத்திருப்பது அமெரிக்க வல்லரசுதான். அமெரிக்க உதவி தவிர இசுரேலும் தன்னளவிலேயே அணுவாய்தங்கள் வைத்திருப்பது மறுக்கப் படவில்லை. ஆறு மாதம் முன்புதான் ஈரானின் அணுக்கரு ஆராய்ச்சித் திட்டத்தைக் குண்டு போட்டு அழித்து விட்டதாக துரும்ப்பின் ஆட்சி சொல்லிக் கொண்டது.

இரண்டாவதாக, லெபனானின் ஹிஸ்பொல்லா, யேமனின் ஹூதி, காசாவின் ஹாமாஸ் போன்ற அமைப்புகள்

தோழர் **தியாகு,**
பொதுச் செயலாளர்,
தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்

இசுரேலிய விரிவாதிக்கத்துக்கும் அமெரிக்க வேட்டைக்கும் தடையாக இருப்பதால் அவை பயங்கரவாத அமைப்புகளாகப் படம்பிடித்துக் காட்டப்படுகின்றன. அரச பயங்கரவாதத்தின் முழு உருவாகத் திகழும் இசுரேலிய சயோனிச அரசைத் தன் அடியாளாக வைத்துக் கொண்டுதான் அமெரிக்கா ஈரானின் பயங்கரவாதம் பற்றிப் பேசுகிறது.

மூன்றாவதாக, ஈரானில் ஆட்சி மாற்றம் என்பது முழுக்க முழுக்க ஈரானிய மக்களின் உரிமை ஆகுமே தவிர அமெரிக்காவோ இசுரேலோ போர் தொடுத்துப் படுகொலைகள் செய்து திணிக்கக் கூடிய ஒன்றன்று. ஈரானில் நடைபெற்று வந்த முகமது மொசாடெக்கின் சனநாயக ஆட்சியை 1953 திசம்பரில் கவிழ்த்து விட்டு மன்னராட்சியைக் கொலுவேற்றியதே அமெரிக்க சிஐஏ உளவு நிறுவனம்தான். இன்றளவும் ஈரானில் தனக்குத் தலையாட்டும் மன்னராட்சியை மீட்பதுதான் துரும்ப்பின் திட்டம்.



இசுரேல் தன் தேவைக்காக அமெரிக்காவை இந்தப் போரில் இழுத்து விட்டிருப்பதாக ஒரு கட்டத்தில் அமெரிக்க அயலுறவு அமைச்சரே சொல்லியிருப்பதை அமெரிக்க செனட் விவாதத்தில் சில உறுப்பினர்கள் எடுத்துக் காட்டினார்கள். ஈரான் தாக்கப் போவது தெரிந்து அதை முன்கூட்டியே தடுப்பதற்காகவே இந்தத் திடீர்ப் போர் என்ற இசுரேலியக் கதையை இசுரேலிலேயே யாரும் நம்ப வில்லை.

ஈரான் இந்தப் போரில் தன் உச்சத் தலைவரையும், 13 மாதப் பேரக் குழந்தை உட்பட அவர் குடும்பத்தைச் சேர்ந்த சிலரையும், ஆட்சியில் முக்கியமான மேலும் சிலரையும் பறிகொடுத்துள்ளது. தெஹ்ரானில் 165க்கு மேற்பட்ட பள்ளிச் சிறுமியர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். செஞ்சோலைப் படுகொலை நம் நினைவுக்கு வருகிறது.





ஈரான் இசுரேல் மீதும், பாரசிக வளைகுடாவிலும் யோர்தானிலும் உள்ள அமெரிக்கப் படைத்தளங்கள் மீதும் எறிகணைத் தாக்குதல் நடத்தி வருகிறது. உலகப் பொருளியலுக்கு உயிர்நாடியான ஹொர்முஸ் நீரிணையை மூடுவதாக அறிவித்துள்ளது. இந்தியா, இலங்கை போன்ற எண்ணெய் இறக்குமதி நாடுகள் இதனால் பெரும் பாதிப்புக்கு உள்ளாகும் என்பதில் ஐயமில்லை.

ஈரானைவம்புக்கிழுத்து ஒழித்துக்கட்டும் அமெரிக்க, இசுரேலியக் கெடுமுயற்சி புதிதன்று. 2018இலும் 2025இலும் இப்படித்தான் நடந்தது. இந்த இரு நிகழ்வுகளிலும் போரைத் தூண்டியவர்கள் இதே துரும்ப்பும் இதே நெதன்யாகுவும்தான். இந்த முறை அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையே பேச்சுவார்த்தை சுமுக முடிவை நெருங்கிக் கொண்டிருந்த போதுதான் இந்த இரட்டைப் பேய்கள் அவசரமாகப் போர் தொடுத்தன. ஈரான் அணுகுண்டு செய்வதில்லை என்றும், அணுவாய்த மூலப்பொருள் குவிப்பதில்லை என்றும் உறுதியளித்திருப்பதால் உடன்பாடு நெருங்கி விட்டதாக ஓமன் நாட்டின் அயலுறவு அமைச்சர் பாதர் அல்-புசைதி பிப்ரவரி 27ஆம் நாள் கூறினார். அடுத்த நாளே இரவோடு இரவாகக் கொடுந்தாக்கு நிகழ்ந்து விட்டது.

ஈரான் மக்களின் உரிமைகள், விடுமைகள் பற்றியெல்லாம் கவலைப்படுவதாகச் சொல்லும் துரும்ப் வகையறா தாங்கிப் பிடித்துள்ள அரபு முடியரசுகளின் வல்லாட்சியம் பற்றிச் சொல்லவே தேவையில்லை. சவுதி அரேபியாவிலும் யோர்தானிலும் குடியாட்சியம்தான் வாழ்கிறதா? உண்மையில் துனிசியா, எகிப்து என்று பற்றிப் பரவிக் கொண்டிருந்த அரபு வசந்தத்தின் குடியாட்சிய அலையை வழிமறித்துக் குருதிச் சேற்றில் அமிழ்த்தியதே அமெரிக்க வல்லரசுதான்.

பன்னாட்டுச் சட்டங்களையோ ஐநா வடிவிலான உலக ஒழுங்கையோ எள்முனையளவும் மதிக்காத கொடுங்கோலர்கள் அமெரிக்க துரும்ப்பும் இசுரேலிய நெதன்யாகுவும். ஓராண்டுக் காலத்தில் ஏழு நாடுகள் மீது குண்டு வீசியிருப்பவர் துரும்ப்பு. பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தால் போர்க் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டிருப்பவர் நெதன்யாகு. காசாவிலும் லெபனானிலும் தெஹ்ரானிலும் குழந்தைகளின் குருதியில் கைநனைத்திருக்கும் கொலைகார இரட்டையர்கள் இவர்கள். இட்லரும் முசோலினியும் போல் முடிந்து போக எல்லாத் தகுதியும் கொண்டவர்கள்.



துரும்ப்பும் நெதன்யாகுவும் அதிகார வெறி கொண்டு இன்று நடுக்கிழக்கு வட்டாரத்தையே போரில் தள்ளி விட்டுள்ளனர். உடனே இவர்களின் கைகள் கட்டப்படவில்லை என்றால் உலகையே பேரழிவுப் போருக்குள் தள்ளி விட்டு விடுவார்கள். அதற்கு முன் இவர்கள் இந்தப் போரில் தோற்கடிக்கப்பட வேண்டும் என்பது மட்டுமல்ல, அவரவர் நாட்டிலும் அதிகாரத்திலிருந்து விரட்டியடிக்கப்பட்டுக் கூண்டிலேற்றப்பட வேண்டும். வரலாற்றின் சுவரில் அப்படித்தான் எழுதப்பட்டுள்ளது.

இறுதியாக, ஈரான் மீதான அமெரிக்க-இசுரேலியப் போர் நமக்குத் தொலைவுச் செய்தி எனக் கருத வேண்டாம். இசுரேல், அமெரிக்கா, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய மூன்று அரசுகளோடும் சேர்ந்து "ஐ2 யு2" உடன்படிக்கையில் இந்திய அரசு ஒப்பமிட்டுள்ளது என்பதால் இந்தப் போர்ப் பாவத்தில் நமக்கும் பங்குள்ளது. யூத சயோனிச நெதன்யாகுவோடு இந்து தேசிய நரேந்திர மோதிக்குள்ள நெருக்கம் போர் தொடங்குவதற்கு முந்தைய நாள் கூட டெல் அவிவில் காட்சிப்படுத்தப்பட்டது. இசுரேல் தந்தை நாடாம்! இந்தியா தாய்நாடாம்! எதற்கு? இசுலாமியருக்கு எதிரான வெறுப்புக்கும் கொலைவெறிக்கும்! போருக்கு நடுவே இந்தியாவிற்கு விருந்தாளியாக வந்த ஈரானியப் போர்க்கப்பல் இந்திய, இலங்கைக் கடல் அருகிலேயே அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பலால் மூழ்கடிக்கப்பட்டிருப்பது போர் விரைந்து பரவி வருவதான் அறிகுறியே ஆகும்.

வரலாற்றைக் கொஞ்சம் திரும்பிப் பார்ப்பதென்றால், மன்றோ கொள்கை அறிவிக்கப்பெற்று இருநூறு ஆண்டுகளுக்கு மேலாயிற்று. அமெரிக்கக் குடியரசுத் தலைவராக இருந்த ஜேம்ஸ் மன்றோ 1823 திசம்பர் 2ஆம் நாள் இந்தக் கொள்கையைப் பறைசாற்றினார். மேற்கு அரைக்கோளம் (அமெரிக்கக் கண்டம்) முழுவதும் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் (அமெரிக்க வல்லரசின்) செல்வாக்குக்கு

**தொடர்ச்சி: பக்கம் 17**

# ஐக்கிய நாடுகள் சபைக்கு வழங்கப்பட்ட தவறான உத்தரவாதம்

## தமிழ் ஏதிலிகள் சபை

ஐக்கிய நாடுகள் சபைக்கு வழங்கப்பட்ட தவறான உத்தரவாதங்களின் அடிப்படையில் இலங்கையின் பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் முன்மொழியப்பட்ட சட்டம் இனப்படுகொலைச் சட்டங்கள் என தமிழ் ஏதிலிகள் சபை கண்டிக்கிறது என அது வெளியிட்டுள்ள தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

**அந்த அறிக்கை வருமாறு:**

தமிழ் ஈழத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக அடக்குமுறை, ஏமாற்றுதல் மற்றும் தொடர்ச்சியான இனப்படுகொலைக்கான கருவிகளாக இலங்கையின் பயங்கரவாதத் தடைச் சட்டம் (PTA) மற்றும் முன்மொழியப்பட்ட பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டம் (PSTA) தொடர்ந்து செயல்படுத்தப்படுவதை தமிழ் அகதிகள் கவுன்சில் கடுமையாகக் கண்டிக்கிறது.

பல தசாப்தங்களாக, ஈழத் தமிழர்களை தன்னிச்சையாகக் கைது செய்யவும், குற்றச்சாட்டு இல்லாமல் தடுத்து வைக்கவும், சித்திரவதை செய்யவும், சிறையில் அடைக்கவும் இலங்கை அரசுக்கு பயங்கரவாதத் தடைச் சட்டம் உதவியுள்ளது. நடைமுறையில், அரசியல் எதிர்ப்பை அடக்கவும், தமிழ் அடையாளத்தை அழிக்கவும், பத்திரிகையாளர்களை மௌனமாக்கவும், மாணவர்களை அச்சுறுத்தவும், வலுக்கட்டாயமாக காணாமல் போனவர்களின் குடும்பங்களை அச்சுறுத்தவும் இந்தச் சட்டம் பயன்படுத்தப்படுகிறது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ், அரசாங்கத்திற்கு எதிராகப் பேசும், இராணுவமயமாக்கலை எதிர்க்கும், இனப்படுகொலையில் பாதிக்கப்பட்டவர்களை நினைவுகூரும் அல்லது பொறுப்புக்கூறலைக் கோரும் எந்தவொரு தமிழரும் சிறைத்தண்டனையை எதிர்கொள்கிறார்.

இந்த யதார்த்தம் இருந்தபோதிலும், இலங்கை சர்வதேச சமூகத்திற்கு, குறிப்பாக ஐக்கிய நாடுகள் சபையில், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மீண்டும் மீண்டும் தவறாகப் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளது. இந்தச் சட்டம் அடக்குமுறைக்கு அல்ல, பொறுப்புடன் பயன்படுத்தப்படுகிறது என்று மூத்த அரசு அதிகாரிகள் கூறியுள்ளனர். அவர்களில் முன்னாள் வெளியுறவு அமைச்சர், அரசியலமைப்பு சட்ட கல்வியாளர் மற்றும் சர்வதேச மன்றங்களில் இலங்கை அரசின் நீண்டகால பிரதிநிதியான ஜி.எல். பீரிஸ் ஒருவர்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் பொதுமக்களுக்கு தீங்கு விளைவிக்கப் பயன்படுத்தப்படவில்லை என்றும், இலங்கையின் சட்ட கட்டமைப்பிற்குள் அது சட்டபூர்வமான மற்றும் "நேர்மறையான" நோக்கங்களுக்கு சேவை செய்கிறது என்றும் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் ஐக்கிய நாடுகள் சபைக்கு பகிரங்கமாக உறுதியளித்தார். சித்திரவதை, எழுந்தமானமான தடுப்புக்காவல், கட்டாயமாக காணாமல் போதல் மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தமிழர்கள் இலக்கு வைக்கப்படுவது குறித்து அதிகரித்து வரும் சர்வதேச கவலைகளின் பின்னணியில் இந்த உத்தரவாதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**அந்த அறிக்கைகள் பொய்யானவை.**

ஈழத் தமிழர்களின் அனுபவம் ஐ.நா.விடம் வழங்கப்பட்ட விவரிப்புக்கு நேரடியாக முரண்படுகிறது. விசாரணையின்றி நீண்டகாலமாக தடுத்து வைத்தல், சித்திரவதையின் கீழ் ஒப்புதல் வாக்குமூலங்களைப் பெறுதல், சிவில் சமூகத்தின் மீதான கண்காணிப்பு, நினைவுகூருதலை குற்றமாக்குதல் மற்றும் தமிழ் அரசியல் நடவடிக்கைகளை மௌனமாக்குதல் ஆகியவற்றை பயங்கரவாதத் தடைச் சட்டம் எளிதாக்கியுள்ளது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் காணாமல் போன குழந்தைகளைத் தேடும் தாய்மார்கள் ஒரு தசாப்தத்திற்கும் மேலாக பதில்கள் இல்லாமல் போராடி வருகின்றனர். பத்திரிகையாளர்கள் மற்றும் ஆர்வலர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுகிறார்கள். இவை எதுவும் பொறுப்புடன் பயன்படுத்தப்பட்ட சட்டத்தைப் பிரதிபலிக்கவில்லை.

பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டத்தை இலங்கை அரசு அறிமுகப்படுத்தியது, ஐக்கிய நாடுகள் சபைக்கு இந்தப் பிரதிநிதித்துவங்கள் தீய நோக்கத்துடன் செய்யப்பட்டவை என்பதை உறுதிப்படுத்துகிறது. துஷ்பிரயோக சட்ட கட்டமைப்பை அகற்றுவதற்குப் பதிலாக, இந்தச் சட்டம் அதே முக்கிய அதிகாரங்களைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது, பயங்கரவாதத்தின் தெளிவற்ற வரையறைகள், பரந்த நிர்வாக அதிகாரம், தடுப்புக் காவல், கண்காணிப்பு மற்றும் வெளிப்பாட்டின் மீதான கட்டுப்பாடுகள், சர்வதேச ஆய்வை திருப்திப்படுத்த அடக்குமுறையை மறுபெயரிடுகிறது.

பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் PSTA-வை பகிரங்கமாக ஆதரித்து பாதுகாத்து, ஐ.நா.விடம் அவர் முன்வைத்த அதே நிலைப்பாட்டை வலுப்படுத்துகிறார்: அசாதாரண அதிகாரங்கள் நியாயமானவை, அவசியமானவை மற்றும் தீங்கற்றவை. அவரது ஒப்புதல், அரசுக் கொள்கையின் தொடர்ச்சியை அம்பலப்படுத்துகிறது, இது சீர்திருத்தம் அல்ல, மாறாக புதிய சொற்களின் கீழ் அடக்குமுறையை நிலைநிறுத்துதல். இனப்படுகொலையின் நோக்கம் மற்றும் விளைவு இரண்டிலும் உள்ளது.

இந்தச் சட்டங்கள் பேச்சு சுதந்திரம் மற்றும் எதிர்க்கும் திறனை முறையாகத் தடுக்கின்றன. அவை வடக்கு மற்றும் கிழக்கில் இராணுவ ஆக்கிரமிப்புஇ நில அபகரிப்பு, மக்கள்தொகை விசிதாசார மாற்றம் மற்றும் கலாச்சார அழிப்பு ஆகியவற்றுடன் இணைந்து செயல்படுகின்றன. ஒரு அரசு மக்களின் அரசியல் இருப்பை ஒழிக்க சட்டத்தைப் பயன்படுத்தும் போது, குற்றவாளிகளை பொறுப்புக்கூறலில் இருந்து பாதுகாக்கும்போது, அது கட்டமைப்பு ரீதியான இனப்படுகொலையில் ஈடுபடுகிறது.

இன்று தமிழ் ஈழத்தில், கருத்து சுதந்திரம் இல்லை. நினைவுகூரல் குற்றமாக்கப்பட்டுள்ளது. அமைதியான போராட்டம் பயங்கரவாதமாகக் கருதப்படுகிறது. காணாமல் போனவர்களின் குடும்பங்கள் கண்காணிக்கப்படுகின்றன. பயங்கரவாத தடுப்புச் சட்டம் மற்றும் முன்மொழியப்பட்ட PSTA ஆகியவை இந்த அடக்குமுறை நிரந்தரமானது, சட்டப்பூர்வமாக்கப்பட்டது மற்றும் சர்வதேச விளைவுகளிலிருந்து பாதுகாக்கப்படுகிறது என்பதை உறுதி செய்கின்றன.

ஆஸ்திரேலிய அரசாங்கம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை உட்பட சர்வதேச சமூகத்திடம் தமிழ் அகதிகள் கவுன்சில் பின்வரும் கோரிக்கைகளை முன்வைக்கின்றது:

பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பான இலங்கையின் உறுதிமொழிகள் தவறானவை என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும்.

பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டம் அதே துஷ்பிரயோகக் கட்டமைப்பின் தொடர்ச்சி என்பதை அங்கீகரிக்கவும் பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் PSTA இரண்டையும் உடனடியாகவும் நிபந்தனையின்றியும் ரத்து செய்யக் கோருங்கள். தமிழர்கள் இலங்கைக்கு நாடுகடத்தப்படுவதையும் கட்டாயமாகத் திருப்பி அனுப்பப்படுவதையும் முடிவுக்குக் கொண்டு வாருங்கள்.

தமிழ் ஈழத்தில் செய்யப்படும் குற்றங்களுக்கான சுயாதீனமான சர்வதேச பொறுப்புக்கூறல் வழிமுறைகளை ஆதரிக்கவும் அடக்குமுறையை மறுபெயரிடுவது அதை சட்டப்பூர்வமாக்காது. ஐக்கிய நாடுகள் சபையிடம் கூறப்படும் பொய்கள் இனப்படுகொலையை அழிக்காது.

**தமிழ் மக்கள் அமைதியாக இருக்க மாட்டார்கள்.**

### 52% ஏற்றுமதிக்கு ஆபத்து... தொடர்ச்சி...

வரவுள்ள நிலையில், தொழிலாளர்களுக்கு முன்பணமும் கொடுப்பனவுகளும் வழங்க வேண்டிய கட்டாயத்தில் தொழிற்சாலைகள் உள்ளன. ஆனால், தேயிலை விற்பனையாகாதது நிதி நெருக்கடியைத் தோற்றுவித்துள்ளது. உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை உயர்வால், உள்நாட்டில் மின்சாரம், போக்குவரத்து மற்றும் உரச் செலவுகள் அதிகரிக்கக் கூடிய அச்சமும் நிலவுகிறது.

#### மாற்றுத் திட்டங்களும் பரிந்துரைகளும்

இந்த இக்கட்டான சூழ்நிலைகளை கையாள்வதற்காக நிபுணர்கள் சில முக்கிய ஆலோசனைகளை முன்வைக்கின்றனர். மாற்று சந்தை வாய்ப்பு என்ற அடிப்படையில் மத்திய கிழக்கை மட்டும் சார்ந்திராமல் கிழக்கு ஆசியா அவுஸ்திரேலியா மற்றும் பசுபிக் பிராந்திய நாடுகளுக்கு ஏற்றுமதியை விரிவுபடுத்த வேண்டும். தற்போதைய சூழலில் இந்தப் பாதைகள் பாதுகாப்பாக உள்ளன என்று நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஏற்றுமதி நடைமுறைகளை விரைவுபடுத்தவும், காப்புறுதிச் சுமைகளைக் குறைக்கவும் அரசாங்கம் தலையிட வேண்டும் என்றும் அவர்கள் கோரியுள்ளனர். தேயிலைத் துறை சரிவதைத் தடுக்க அரசாங்கம் ஒரு விசேட நிதிப் பொதியை அல்லது அவசரகால திட்டத்தை அறிமுகப்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

மூலப் பொருட்களாக தேயிலையை ஏற்றுமதி செய்வதற்குப் பதிலாக, முடிவுற்ற தயாரிப்புகளாக மாற்றி அதிக இலாபத்தைப் பெற முயற்சி செய்யலாம் என்றும் பொருளாதார நிபுணர்கள் தங்களது பரிந்துரைகளை முன்வைத்துள்ளதாக பெருந்தோட்ட நிறுவனங்கள் கூறுகின்றன.

மத்திய கிழக்கில் நீடிக்கும் போர் பதற்றம் என்பது வெறும் அரசியல் மோதல் மட்டுமல்ல, அது இலங்கையின் பல்லாயிரக்கணக்கான தேயிலை தோட்ட தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் ஒரு பொருளாதாரப் பேரழிவாகும். 52% சந்தை வாய்ப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள நிலையில், இலங்கை அரசாங்கமும் தேயிலை சபையும் மிகத் துரிதமாகச் செயற்பட வேண்டியது அவசியமாகும். சர்வதேச சந்தையை பல்வகைப்படுத்துவதும், உள்நாட்டு உற்பத்தியாளர்களைப் பாதுகாப்பதும் மட்டுமே 'சிலோன் டீ' இன் புகழைத் தக்கவைப்பதற்கான ஒரே வழியாகும்.

### மத்திய கிழக்கு போர்: ... தொடர்ச்சி...

ளதாக இலங்கையின் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சிக்கலைத் தீர்ப்பதற்கும், உயிருக்கு ஏற்படும் அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்துவதற்கும், பிராந்திய பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் தேவையான தலையீடுகளை அரசாங்கம் மேற்கொண்டு வருவதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ கூறியிருந்தார்.

### மத்திய கிழக்கு போர்: ... தொடர்ச்சி...

அரசாங்கம் வந்தாலும் கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் இனவிகிதாசாரத்தினை மாற்றும் வகையிலான செயற்பாடுகளை முன்னெடுக்கும் வகையிலேயே செயற்படுகின்றனர்.

அதன்காரணமாக தமிழ் தேசிய அரசியல் ஒன்றுபட்ட ரீதியில் கட்டியெழுப்பப்படவேண்டும். சிவில் சமூக செயற்பாடுகள் கிழக்கில் பலமிக்கதாக மாற்றப்பட வேண்டும் என்பதுடன் இது தொடர்பிலான தொடர்ச்சியான விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

### காணாமல் ஆக்கப்பட் ... தொடர்ச்சி...

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி கோரி அவர்களின் உறவுகளால் முல்லைத்தீவில் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டம் மார்ச் 8ஆம் திகதியுடன் ஒன்பது ஆண்டுகளை நிறைவுசெய்து பத்தாவது ஆண்டாகத் தொடரவுள்ள நிலையில் அவர்களுக்கான நீதி கிடைக்கவில்லை.

என்னுடைய மகன் வருவான், என்னுடைய மகள் வருவாள், என்னுடைய கணவன் வருவார்,என்னுடைய மனைவி வருவார், என்னுடைய அப்பா வருவார்,என்னுடைய அம்மா வருவார் என்ற எதிர்பார்ப்போடு தினமும் காத்திருந்து மாறி வரும் அரசுகளையும் நம்பி ஏமாந்து,சர்வதேசத்திடமும் நீதி கேட்டு ஏங்கி ஏங்கியே ஒவ் வோர் உறவும் ஏக்கத்தோடு மரணிக்கின்றனர்.

இலங்கை அரசின் பிள்ளை உளவியல்,பெண்ணிய விடுதலை, பாலின சமத்துவம், மனித உரிமை, முதியோர் நலன் பேணல் அனைத்துமே காணாமல் ஆக்கப்பட்ட எங்கள் உறவுகளுக் கான உங்களின் நீதியில் பொய்த்துப்போயுள்ளது. மத்திய கிழக்கின் அதிர்வுகளுக்கே அவசர நிலை தேடும் உங்களுக்கு அருகிலுள்ள எங்களின் அவதிகள் எப்போது தான் புரியப்போகிறது எனக் கேள்வி எழுப்பினார்.

### சட்டத்தரணி முயற்றி ... தொடர்ச்சி...

Justice) என்றே பார்க்கத்தோன்றுகிறது.2009-ல் எமக்கு நேர்ந்த பேரவலத்தின் போதுமௌனம் காத்த அல்லது துணை நின்ற நாடுகள் இன்றுதமக்குள் மோதிக்கொள்கின்றன.

# பேள் காபரை விட மோசமான அழிவைச் சந்தித்த அமெரிக்கா

அலோன் மிஸ்ராஹி



ஒரு வரலாற்று நிகழ்வை நாம் காண்கிறோம். அனைவரையும் ஆச்சரியப்படுத்தும் விதமாக, ஈரான் அமெரிக்க தளங்களை இவ்வளவு முழுமையாகவும், இவ்வளவு பெரிய அளவிலும், மிகவும் தீர்க்கமாகவும் அழித்து வருகிறது, உலகம் அதற்குத் தயாராக இல்லை. நான்கு நாட்களில், ஈரான் தனது இராணுவ ஆதிக்கத்தை பிராந்தியத்தில் விரிவுபடுத்த முடிந்தது. அது உலகின் மிகவும் மதிப்புமிக்க மற்றும் விலையுயர்ந்த இராணுவ தளங்கள், சொத்துக்கள் மற்றும் உபகரணங்களை அழித்துவிட்டது.



பஹ்ரைன், குவைத், கத்தார் மற்றும் சவுதி அரேபியாவில் உள்ள அமெரிக்க தளங்கள் உலகின் மிகப் பெரிய இராணுவ தளங்களில் சிலவாகும். அவற்றின் கட்டுமானத்திற்கு பல தசாப்தங்களாக டிரில்லியன் கணக்கான டாலர்கள் செலவாகியுள்ளன. 30 ஆண்டுகளுக்கும் மேலாக மேற்கொள்ளப்பட்டஇராணுவச் செலவில் பெரும்பாலானவை புகைந்து போயுள்ளன என்ற உண்மையைப் பற்றி நாங்கள் பேசுகிறோம்.

நூற்றுக்கணக்கான மில்லியன் டாலர்கள் செலவழித்த ரேடார்கள் ஒரு நொடியில் அழிக்கப்படுவதைக் காண்கிறோம். முழு இராணுவ தளங்களும் கைவிடப்பட்ட, தீ வைக்கப்பட்ட, கொள்ளையடிக்கப்பட்ட மற்றும் அழிக்கப் பட்டதைக் காண்கிறோம். எனக்குத் தெரிந்தவரை, அமெரிக்கா அதன் வரலாற்றில் இதுபோன்ற அழிவைச் சந்தித்ததில்லை, ஒருவேளை பேர்ல் ஹார்பரைத் தவிர, ஆனால் அது ஒரே ஒரு தாக்குதல் மட்டுமே என்பதை நான் உங்களுக்குச் சொல்கிறேன்.

ஒரு வழக்கமான போரில் எந்த எதிரியும் ஈரான் தற்போது செய்வது போல அமெரிக்க இராணுவப் படைகளுக்கு இதைச் செய்ததில்லை. நம்புவது கடினம். இராணுவ நிலைமை மிகவும் மோசமாக இருப்பதால், இந்தப் போரைப் பற்றிய கிட்டத்தட்ட அனைத்து புதிய தகவல்களையும் தணிக்கை தடுக்கிறது. நீங்கள் கவனித்திருந்தால்தெரியும், ஒவ்வொரு நாளும் நமக்குக் குறைவான தகவல்கள் கிடைக்கின்றன. முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு, முதல் ஈராக் போரின் போது, அவர்கள் ஈராக்கிலிருந்து மிக அதிகமான படங்களை எங்களுக்குக் காட்டினர். அப்போது, ஸ்மார்ட் குண்டுகள் மற்றும் கேமராக்கள் ஒரு புதுமையாக இருந்தன, ஆனால் ஒவ்வொரு இரவும் அவர்கள் எங்களுக்கு இரவு நேர காட்சிகளைக் காட்டினர்.



இப்போது நாம் எந்த வீடியோக்களையும் பார்ப்பதில்லை. இதைப் புரிந்து கொள்ளுங்கள்! இது உலகின் மிகப்பெரிய இராணுவ சக்தி என்று கூறப்படுகிறது, உலகின் மிகப்பெரிய விமானத் திறன் கொண்டது, மேலும் அமெரிக்க தாக்குதலின் நான்காவது நாளில் - ஈரானிய பாதுகாப்புகளை உடைத்ததாகக் கூறப்படுகிறது - ஈரானிய வானத்தில் அமெரிக்க ஆதிக்கத்திற்கான எந்த அறிகுறியையும் நாங்கள் காணவில்லை.

தெஹ்ரான் அல்லது ஈரானின் வேறு எந்தப் பகுதியிலும் நமது விமானங்கள் பறக்கும் பதிவுகள் எல்லாம் எங்கே? அமெரிக்க வீரர்கள் ஈரானிய மண்ணில் கால் பதிப்பதைக் கனவிலும் கூட நினைக்க முடியாது. இந்தப் போர் எவ்வளவு அவநம்பிக்கையானது என்பதைப் புரிந்துகொள்ள, நான்காவது நாளில் அவர்கள் ஏற்கனவே டிரம்ப் நிர்வாகத்திடமிருந்து மிகவும் விசித்திரமான திட்டங்கள் மற்றும் யோசனைகளைக் கேட்கிறார்கள்.



தமிழில்: **ஆர்தீகன்**

பாரசீக வளைகுடாவிலிருந்து வெளியேறும் எண்ணெய் டேங்கர்களுக்கு இராணுவப் பாதுகாவலர்களை அனுப்ப அவர்கள் பரிந்துரைக்கிறார்கள். அவர்கள் என்ன பேசுகிறார்கள்?! ஆயிரக்கணக்கான ஈரானிய ஏவுகணைகளால் சூழப்பட்டுள்ளஅழிவுகரமான பகுதிக்கு அமெரிக்க கப்பல்களை அனுப்ப விரும்புகிறார்களா? இப்போது, ஹார்முஸ் ஜலசந்தியைக் கடந்து யாரும் செல்ல முடியாது. ஈரானியர்கள் பல தசாப்தங்களாக இதற்குத் தயாராகி வருகின்றனர். ஈரானை ஆக்கிரமிக்க குர்திஷ் போராளிகளுக்கு ஆயுதம் ஏந்துவது என்ற யோசனையைப் பற்றி அவர்கள் பெருமை பேசுகிறார்கள். அவர்கள் என்ன பேசுகிறார்கள்? ஈரானின் வரைபடத்தைப் பார்த்திருக்கிறார்களா? டிரம்ப் நிர்வாகம் ஈரானின் வரைபடத்தைப் பார்த்ததில்லை போல் தெரிகிறது! அது எவ்வளவு பெரியது என்று அவர்களுக்குத் தெரியுமா? ஈரானை ஆக்கிரமிப்பது என்றால் என்ன?



10,000 பேர் கொண்ட ஒரு போராளிக்குழு ஈரானை ஆக்கிரமிக்க முடியும் என்று அவர்கள் நினைக்கிறார்களா? அல்லது 50,000 பேர் கூட? அல்லது 100,000 பேரா? ஈரான் அவர்களை முழுவதுமாக விழுங்கிவிடுவார்களா? அமெரிக்காவும் இஸ்ரேலும் ஏற்கனவே இந்தப் போரில் தோற்றுவிட்டன. அவர்கள் வீடுகளில் மில்லியன் கணக்கான பொது மக்களைக் கொல்ல முடியும். அவர்களிடம் சக்திவாய்ந்த குண்டுகள் உள்ளன, கட்டிடங்களை தகர்க்க முடியும், ஆனால் அவர்களால் இந்தப் போரில் வெற்றி பெற முடியாது.

ஈரானின் இராணுவ உள்கட்டமைப்பு மற்றும் ஆயுதங்கள் ஈரான் முழுவதும் நிலத்தடியில் உள்ளன. அமெரிக்கர்களோ, குறிப்பாக இஸ்ரேலியர்களோ அவற்றை அடைய சிறிதும் வாய்ப்பில்லை. அவர்கள் கடுமையான சிக்கலில் உள்ளனர். அவர்கள் முடிக்க வாய்ப்பில்லாத ஒன்றைத் தொடங்கினர். இவை அனைத்தும் முடிந்ததும், அமெரிக்கா ஒருபோதும் மேற்கு ஆசியாவிற்குத் திரும்பாது.

தொடர்ச்சி: பக்கம் 17



# ஈரான் போர் - பொறியில் சிக்கியதா அமெரிக்கா?

வேல்ஸில் இருந்து **அருஸ்**

ஈரான் மீதான போர் ஒரு பிராந்திய போராக மாற்றம் பெறும் என ஈரான் மீண்டும் மீண்டும் தெரிவித்து வந்ததை புறக்கணித்த மேற்குலக கூட்டணி தற்போது ஒரு மீள முடியாத பொறிக்குள் சிக்கியுள்ளது.



வெனிசுலாவில் பெற்ற வெற்றியை போல அல்லது சிரியாவில் பெற்ற வெற்றியை போல ஒரு இலகுவான வெற்றியை ஈரானின் தலைமைப் பீடத்தை அழிப்பதன் ஊடாக பெற்றுவிடலாம் என இஸ்ரேலும் அமெரிக்காவும் போட்ட கணக்குள் முற்றாக தவறாகி போயுள்ளதையே தற்போதைய களயதார்த்தம் காட்டுகின்றது.

ஈரானை தாக்கினால் ஈரான் இஸ்ரேலையும், அமெரிக்கத் தளங்களையும் தாக்கும் என்பதை கணிப்பிட்டு இஸ்ரேலை பாதுகாக்க ஜெரால்ட் போர்ட் என்ற விமானந்தாங்கி கப்பல் இஸ்ரேலுக்கு அருகில் நிறுத்தப்பட்டதுடன், பெருமளவான வான்பாதுகாப்பு ஏவுகணைகளும் குவிக்கப்பட்டன. கடந்த ஜனவரி மாதம் முதல் 250 இராணுவ சரக்கு விமானங்கள் இஸ்ரேலில் தரையிறங்கியிருந்தன.



மறுவளமாக மத்தியகிழக்கில் உள்ள அமெரிக்கத் தளங்களில் இருந்த படையினர் அருகில் உள்ள ஆடம்பர விடுதியில் தங்கவைக்கப்பட்டனர். ஆனால் திட்டமிடப்பட்ட வியூகம் வேலைசெய்யவில்லை. மாறாக ஈரான் அமெரிக்க படையினர் தங்கியிருந்த விடுதிகளை மட்டுமல்லாது, அமெரிக்கத் தளங்கள், அமெரிக்க மற்றும் நேட்டோ கூட்டணி நாடுகளின் முதலீடுகள், எரிபொருள் சுத்திகரிப்பு நிலையங்கள், அனைத்துலக விமான நிலையங்கள் மற்றும் அமெரிக்க தூதரகங்கள் மீது தாக்குதலை ஆரம்பித்ததுடன், அமெரிக்க, இஸ்ரேல் நாடுகளுடன் நேரிடையாகவும் மறைமுகமாகவும் ஒத்துழைக்கும் 17 நாடுகளை ஒரே தடவையில் தாக்கியதுடன், இந்த பத்தி எழுதப்படும் வரையிலும் தாக்குதல் தொடர்கின்றது.

தாக்குதல் ஆரம்பிக்கப்படும்போது அது 2 அல்லது 3 நாட்களுக்குள் முடிந்துவிடும் என்றே அமெரிக்கா நம்பியது. ஆனால் தற்போது அது 4 வாரங்கள் நீடிக்கும் என அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்றம்ப் தெரிவித்துள்ளபோதும், எதிர்வரும் செப்டம்பர் மாதம் வரையிலும் நீடிக்கும் என அமெரிக்க ஊடகமாக பொலிற்றிக்கோ தெரிவித்துள்ளது மத்திய கிழக்கு நாடுகளை மட்டுமல்லாது, உலக நாடுகளை கலங்கடித்துள்ளது.

படைத்துறை ரீதியாக அமெரிக்கா ஈரானின் வான் பரப்பை தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாக கூறினாலும், அதுவும் முழுமையாக இல்லை. அவர்கள் ஈரானினில் எல்லைப் புறத்தில் இருந்து அதி உயர்வாக பறக்கும் எப்-22, எப்-35, பி-2 மற்றும் பி-52 விமானங்கள் மூலம் குண்டுகளை வீசுகின்றனர். குவைத்து வான்படையினரின் எப்-18 விமானத்தில் இருந்து ஏவப்பட்ட 3 வான் தாக்குதல் ஏவுகணைகள் மூலம் 3 எப்-15E விமானங்களை அமெரிக்கா இழந்துள்ளது. மேலும் ஈரானில் இரண்டு எப்-15E விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டதை இஸ்ரேலிய ஊடகங்கள் தெரிவித்தாலும் அமெரிக்கா மறுத்து வருகின்றது.

ஈரானின் வான் பரப்பை அவர்கள் வைத்திருந்தாலும், மத்திய கிழக்கில் உள்ள வான்படை, கடற்படை மற்றும் தரைப்படைத் தளங்கள் அனைத்தையும் அமெரிக்கா இழந்துவிட்டது. அதாவது அவர்கள் அதனை தேவையான நேரத்தில் பயன்படுத்த முடியாது இதனை மறுவளமாக கூறினால் ஈரான் அவற்றை தன்வசப்படுத்தியுள்ளது.

ஹவுத்திகளால் ஆப்பிரிக்காவில் உள்ள துறைமுகங் கள் முழுமையாக பாதிக்கப்படுவதால், அமெரிக்க கடற்படை அதன் டோமாஹாக் ஏவுகணைகளை கப்பல்களில் கிழக்கே பெரும்பாலும் பாகிஸ்தான் அல்லது இந்தியாவில் மட்டுமே மீண்டும் ஏற்ற முடியும், அவற்றை கடலில் வைத்து ஏற்ற முடியாது. டியாகோ கார்சியா சுமார் 3,000 கிமீ தொலைவில் உள்ளது எனவே அங்கு சென்றுவர ஒரு வாரத்திற்கும் மேலாக எடுக்கும். மேலும் ஈரானின் தாக்குதல்களை தடுப்பதற்கு இதுவரையில் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படையினர் 800 இற்கு மேற்பட்ட தாட் மற்றும் பற்றியாட் ஏவுகணைகளை பயன்படுத்தியுள்ளனர். இருந்தாலும் ஈரானின் தாக்குதல்களை முற்றாக முறியடிக்க முடியவில்லை.

ஒரு மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதல்களை நடத்தியவாறு ஈரானிய மக்களை அல்லது குருதிஸ் படையினரை தரையில் ஈரானுக்கு எதிராக பயன்படுத்தும் சி.ஜ.ஏயின் திட்டங்களும் வெற்றிபெறவில்லை. ஆன்மீகத் தலைவர் அயத்தொல்லா கமேனியின் மரணம் ஈரான் மக்களை ஒரு தேசமாக எழ வைத்துள்ளது. எனவே தரையில் ஒரு எதிர்ப்போ அல்லது நடைவடிக்கையோ இன்றி ஒரு ஆட்சிமாற்றத்தை அங்கு ஏற்படுத்த முடியாது.



ஈரான் 17 நாடுகளை தொடர்ந்து தாக்கி வந்தாலும் அமெரிக்கா மற்றும் இஸ்ரேலை தவிர எந்த ஒரு நாடும் ஈரானை திருப்பித் தாக்க துணியவில்லை. அதுவும் ஈரானுக்கு கிடைத்த வெற்றியாகவே பார்க்கப்படுகின்றது.

ரஷ்யர்கள் நான்கு ஆண்டுகளில் உக்ரைனில் சுமார் 200,000 டன் ஏவுகணைகள், குண்டுகள் மற்றும் ட்ரோன்களை செலவிட்டுள்ளனர். அமெரிக்க-இஸ்ரேல் கூட்டணி ஈரானில் சராசரியாக நாள் ஒன்றிற்கு 1,000 டன் குண்டுகளை வீசுகிறது, மேலும் அதை அதிகரிப்பது போரை வெல்ல முடியாது, உக்ரைனில் ரஷ்யா பெற்ற அனுபவம் மற்றும் ஆப்கானிஸ்தான் மற்றும் வியட்நாமில் இருந்து பெற்ற பாடங்களின் அடிப்படையில் அது சாத்தியமில்லை.




தற்போதைய நெருக்கடியான நிலையில்கூட ஈரான் இதுவரையில் வடகொரியாவிடமோ அல்லது ரஸ்யாவிடமோ உதவியை கேட்கவில்லை. தன்னால் சமாளிக்க முடியும் என ஈரானிய வெளிவிவகார அமைச்சர் அப்பாஸ் அரக்சி கூறுகின்றார். ஈரான் கடுமையான சேதங்களை சந்தித்து வருகின்றது. அதன் கடற்படை பல கப்பல்களை இழந்துள்ளது, வான்படை முற்றாக முடக்கப்பட்டுள்ளது. இலங்கை கடற்பரப்பில் இந்தியாவின் துணையுடன் அமெரிக்காவின் நீர்மூழ்கிக் கப்பல் மேற்கொண்ட தாக்குதலில் 148 ஈரானிய கடற்படையினர் கொல்லப்பட்டதும் அந்த நாடு சந்தித்த இழப்புக்களில் முக்கியமானது.

எனினும் ஒரு சமச்சீரற்ற களமுனையில் அவை முக்கியமற்றவை. உக்ரைன் போரில் முதல் சில நாட்களில் உக்ரைனின் வான்படை, கடற்படை மற்றும் டாங்கிப்படை அனைத்தும் ரஸ்யாவால் முடக்கப்பட்டது. ஆனாலும் நான்கு ஆண்டுகளாக போர் தொடர்கின்றது.




ஆனால் ஈரான் போரை பொறுத்தவரையில் அது ஏற்படுத்தும் பொருளாதார அழுத்தங்கள் தான் ஒரு வாரத்திற்குள் உலகம் அதன் வலியை உணர வைத்துள்ளது. எண்ணெய் மற்றும் எரிவாயு விலைகள் தொடர்ந்து உயரும், அதிக எரிபொருள் மற்றும் சரக்கு செலவுகள் பணவீக்கம் மற்றும் பொருளாதார வளர்ச்சியில் அழுத்தத்தை ஏற்படுத்துகின்றன. மத்திய கிழக்குப் பிராந்தியம் முழுவதும் உள்ள தொழில்கள் பெரும்பாலும் மூடப்பட்டுள்ளன, மேலும் வளைகுடா நாடுகளில் உள்ள கிட்டத்தட்ட அனைத்து வெளிநாட்டு தொழிலாளர்களும் ஏற்கனவே வெளியேற்றப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி: பக்கம் 17



# சீனாவுக்கு எதிரான மேற்கத்திய முக்கிய கூட்டாளியாக இந்தியா மாறும்

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள இப்போதைய நெருக்கடி குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆய்வு மையத்தால் 2006 ஆம் ஆண்டு துல்லியமாக கணிக்கப்பட்டு வெளியிடப்பட்ட கட்டுரையை காலத்தின் தேவை கருதி இலக்கு வாசகர்களுக்கு தற்போது தருகின்றோம். இந்த ஆக்கத்தை எழுதியவர் அன்றைய அரசியல் ஆய்வு மையத்தின் பொறுப்பாளர் குணா கவியழகன்

**இந்தியா, அமெரிக்கா, சீனா மற்றும் ஈரான் மோதல்; இலங்கை நெருக்கடி ஏன் விரைவில் தீர்க்கப்பட வேண்டும்?**

## குணா கவியழகன்

இன்றைய சர்வதேச அரசியலின் மையக் கவனம் பாரசீக வளைகுடாவாகும். உலகமயமாக்கலின் எதிர்காலம் இந்தியப் பெருங்கடலைப் பாதுகாப்பதில் உள்ளது. இந்தப் பகுதியை கட்டுப்படுத்துவதற்கான போட்டி ஒரு புறம் அமெரிக்கா மற்றும் அதன் கூட்டாளிகள், மறுபுறம் சீன மக்கள் குடியரசு மற்றும் அதன் நண்பர்கள் ஆகியோருக்கிடையே நடைபெற்று வருகிறது.




இந்தப் போட்டியின் ஒரு முக்கிய அம்சம், ஈரானை கட்டுப்படுத்த அமெரிக்கா எடுத்துவரும் நடவடிக்கைகளாகும். எனவே, ஈரானுக்கு எதிராக அமெரிக்கா தீவிரப்படுத்தும் தாக்குதல் இரண்டு நாடுகளுக்கிடையேயான அரசியல் சிக்கல்களால் அல்ல; மாறாக, ஈரான் சர்வதேச உறவுகளில் வகிக்கும் முக்கியப் பங்கினால் ஆகும். இது இந்தியப் பெருங்கடல் மண்டலத்தின் பிரதான பிரச்சினையாகவும் மாறியுள்ளது. நமது சிறிய தீவும் இதன் முக்கியத்துவத்தை அலட்சியப்படுத்த முடியாது.

சீனாவின் நீண்டகாலத் திட்டம் ஆசியாவிலும் உலகின் பிற பகுதிகளிலும் அமெரிக்காவை எதிர்ப்பதாகும் என ஆஸ்திரேலியாவில் தங்கியிருக்கும் முன்னாள் சீன தூதர் சென் ஜான் லிங் கூறுகிறார் (1). அதாவது, ஆசியப் பகுதியிலும் அதற்கு அப்பாலும் அமெரிக்காவின் வாணிப மற்றும் பொருளாதார நலன்களை எதிர்த்து தனது கட்டுப்பாட்டை நிலைநிறுத்துவதே சீனாவின் நோக்கம்.

அமெரிக்காவின் வெளிநாட்டு கொள்கை ஒரு புறம் நட்பு உறவுகளைப் பேணிக்கொண்டே மறுபுறம் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்கிறது என்பதை சீனா எச்சரிக்கையுடன் கவனித்து வருகிறது (2). இதனால், மியான்மர் (பர்மா), மாலத்தீவு, பாகிஸ்தான் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளில் கடற்படை இருப்பை வலுப்படுத்தி இந்தியப் பெருங்கடல் பகுதியில் ஆதிக்கம் செலுத்த முயல்கிறது.

கடந்த ஆண்டு ஆகஸ்டில் சீனா மற்றும் ரஷ்யா இணைந்து நடத்திய இராணுவப் பயிற்சிகளுக்குப் பின்னர், சீனா மத்திய ஆசியாவில் உள்ள அமெரிக்கத் தளங்களை நீக்க விரும்புகிறது என்று ஒரு அமெரிக்க அதிகாரி கருத்து தெரிவித்தார் (3).



இதற்கான முன்னேற்பாடாக சீனா தனது கடற் படையை மேம்படுத்தி இந்தியப் பெருங்கடலில் தனது பிடியை வலுப்படுத்துகிறது. இந்தியப் பெருங்கடலை விட்டு ஆசியாவை ஆள முடியாது. ஆசியாவின் வாணிப, பொருளாதார நலன்களின் மையமாக இந்தியப் பெருங்கடல் உள்ளது. உலகமயமாக்கலின் செயல்முறையையும் இது கட்டுப்படுத்துகிறது.

சீனா இந்தியப் பெருங்கடலில் ஆதிக்கம் செலுத்தும் முயற்சிகள் மூலம் ஒருமுக உலக ஒழுங்குக்கு மாற்றாக இருமுக அரசியல் அமைப்பின் அடித்தளத்தை அமைக்க முயல்கிறது. மேற்கத்திய உலகின் வரலாற்றுப் பகைவர்களாகக் கருதப்படும் இஸ்லாமிய நாடுகளை கூட்டாளிகளாக பயன்படுத்தி தனது நடவடிக்கைகளை விரிவுபடுத்துகிறது.

உலக பொருளாதாரம் பாரசீக வளைகுடாவில் இருந்து இந்தியப் பெருங்கடல் வழியாக கொண்டு செல்லப்படும் கச்சா எண்ணெய் மீது சார்ந்துள்ளது. மலாக்கா நீரிணை வழியாக நாள்தோறும் 9.5 மில்லியன் பேரல்கள் எண்ணெய் கடத்தப்படுகிறது. இது சுவெஸ் கால்வாய் வழியாக செல்லும் அளவின் மூன்று மடங்கு. பனாமா கால்வாயை விட 15 மடங்கு அதிகம்.



உலக எண்ணெய் வளத்தின் 65% வளைகுடாவில் உள்ளது. இங்கு எண்ணெய் போக்குவரத்து பாதிக்கப்பட்டால் உலக பொருளாதாரம் கடுமையாக பாதிக்கப்படும் (4). ஆண்டுதோறும் 30,000 கப்பல்களும் 1,500 எண்ணெய் டேங்கர்களும் இந்தியப் பெருங்கடலைப் பயன்படுத்துகின்றன (5). இந்தியப் பெருங்கடல் வளைய நாடுகளின் மக்கள் தொகை உலக மக்கள் தொகையின் 35%. உலக உற்பத்தியில் 5.5% இந்நாடுகளிலிருந்து வருகிறது. ஆகவே, இந்தியப் பெருங்கடல் நாடுகள் உலகின் மிகப்பெரிய சந்தையாகும் (6).

எரிசக்தி, வாணிபம் அல்லது சந்தைகள் எதற்காக இருந்தாலும் உலக பொருளாதாரம் இந்தியப் பெருங்கடலின் மீது சார்ந்துள்ளது. எனவே, அமெரிக்கா தலைமையிலான மேற்கத்திய நாடுகளுக்கு இப்பகுதியில் தங்களது ஆதிக்கம் சவாலுக்குள்ளாகாமல் இருப்பது அவசியமாகிறது.

இந்தியப் பெருங்கடலில் சீனாவின் வளர்ந்துவரும் செல்வாக்கும், வளைகுடா பகுதியில் வலுவான கடற்படையைக் கொண்ட ஈரானின் எழுச்சியும் மேற்கத்திய ஆதிக்கத்திற்கு அச்சுறுத்தலாகின்றன (7).

தற்போது “பச்சை அபாயம்” எனப்படுவது-அதாவது மேற்கத்திய நாடுகள் அஞ்சும் இஸ்லாமிய அடிப்படை வாத எழுச்சி – உருவாகும் அரசியல் திறன் ஈரானுக்கே உள்ளது. சீனாவுடன் நட்பு உறவு கொண்ட ஈரான் அதன் சக்தியை உயர்த்திக் கொண்டிருக்கிறது. இதனால் ஈரானின் பேரம் பேசும் வலிமையும் உயரும். சீன மற்றும் ஈரான் கடற்படைகள் இந்தியப் பெருங்கடலில் அச்சுறுத்தலாக மாறும்.

மேற்கத்திய பிடி தளர்ந்து சீனா மேலோங்கினால்,

**தொடர்ச்சி: பக்கம் 16**

## சீனாவுக்கு எதிரான ... தொடர்ச்சி...

ஆசிய மூன்றாம் உலக நாடுகள் சீனாவை நோக்கித் திரும்பும். இச்சூழலில், ஈரானை வீழ்த்த அமெரிக்கா முனைகிறது.

ஓமான் கடற்படைத் தளமும் வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சிலின் (GCC) கூட்டு படைகளும் இருந்தாலும், அவை ஈரானின் வலுவான கடற்படைக்கு சமமல்ல (8).

சீனா முழுமையான பொருளாதார வலிமையைப் பெறும் முன் ஈரானை சமன்பாட்டிலிருந்து நீக்குவதே அமெரிக்காவின் கொள்கை. ஈரான் நீக்கப்பட்டால் அது சீனாவின் ஒரு இறக்கையை வெட்டுவதற்கு ஒப்பாகும்.

பலதுருவ உலக அமைப்பை ஆதரிக்கும் இந்தியா, இந்தியப் பெருங்கடலில் தனது பிடியை வலுப்படுத்த விரும்புகிறது. சீனாவுடனான பாரம்பரிய போட்டியின் காரணமாக ஈரான் தோற்கடிக்கப்படுவது இந்தியாவிற்கு சாதகமானது. எனவே, ஈரானுக்கு எதிரான போரில் அமெரிக்கா மட்டும் அல்ல, இந்தியாவும் ஈடுபட வாய்ப்பு உள்ளது.

ஈரானுடன் நீண்டகால நட்பு இருந்தபோதிலும், சீனாவுடனான போட்டியின் காரணமாக இந்தியா அமெரிக்காவுக்கு நிபந்தனையற்ற ஆதரவு அளிக்கிறது.

அமெரிக்கா ஈரானை தோற்கடிக்க விரும்பினால், அதை மற்ற இஸ்லாமிய நாடுகளிலிருந்து தனிமைப்படுத்த வேண்டும். ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தான் ஏற்கனவே கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. ஈரானின் கிழக்கு எல்லையில் உள்ள பாகிஸ்தான் இஸ்லாமிய அணு சக்தி நாடாக உள்ளது. பாகிஸ்தானை எதிர்த்து போர் நடத்துவது அமெரிக்காவுக்கு பொருத்தமல்ல. எனவே, பாகிஸ்தான் ஆதரவு அவசியம் (9).

பாகிஸ்தான் சீனாவின் நட்பு வட்டத்தில் இருந்தாலும், வளைகுடா போர் முடியும் வரை அமெரிக்கா அதனுடன் நட்புறவை பேணும். பாகிஸ்தான் இரு தரப்பிடமும் பேரம் பேசும் வலிமையை அதிகபட்சமாக பயன்படுத்தும்.

வளைகுடா போர் முடியும் வரை அமெரிக்கா பாகிஸ்தானின் கோரிக்கைகளுக்கு இணங்க வேண்டியிருக்கும்; இந்தியா அமெரிக்க நலன்களுக்கு இணங்க வேண்டியிருக்கும்.

மேற்கத்திய நாடுகள் வளைகுடாவை முழுமையாக கட்டுப்படுத்திய பின், அணு ஆயுதம் கொண்ட பாகிஸ்தான் மேற்கத்திய நாடுகளுக்கு முன்னுரிமைப் பிரச்சினையாக மாறும். இந்தியா மேற்கத்திய வெற்றி வரை பாகிஸ்தானை சகிப்புத்தன்மையுடன் அணுகும்.

வளைகுடா பாதுகாப்பான பின், சீனாவுக்கு எதிரான மேற்கத்திய முக்கிய கூட்டாளியாக இந்தியா மாறும். இந்தியப் பெருங்கடல் தொடர்பான அனைத்து முடிவுகளிலும் மேற்கத்திய நாடுகள் இந்தியாவை ஆதரிக்க வேண்டிய நிலை உருவாகும்.

இந்த சூழலில் தென்னாசியாவில் இந்தியா தனது பிராந்திய கொள்கையை வேகமாக அமுல்படுத்தும். இலங்கை இதன் முதன்மை கேள்வியாகும். சிங்களர்களா அல்லது தமிழர்களா அரசியலில் மேலோங்குவார்கள் என்ற கேள்விக்கு இந்தியா தீர்மானம் வழங்கும். இலங்கை இந்தியாவின் ஒரு பகுதியாகும் என்ற பாரம்பரிய சிந்தனைக்கு ஏற்ற சர்வதேச சூழல் உருவானால், தீவின் தனித்தன்மையை யார் உறுதி செய்வார்கள்?

இந்தக் கட்டுரையின் மையக் கருத்து என்னவெனில், வளைகுடாவில் மேற்கத்திய வெற்றிக்கு பின்னர் புதிய சர்வதேச ஒழுங்கு உருவாகும் முன் இலங்கையின் இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்பதாகும். தமிழர்களுக்கான தனிநாடு ஏற்பட்டாலும் சிங்களர்களுக்கு பாதிப்பு இல்லை; பகிர்ந்த ஆட்சி ஏற்பட்டாலும் தமிழர்களுக்கு பாதிப்பு இல்லை.

**வடகிழக்கு மாத இதழ் :: 2006 : ஜூலை**
**எழுதியவர்: GeeKay**

**முடிவுக் குறிப்புகள்**

(1) Soldier of Fortune, டிசம்பர் 2005
(2) அதே
(3) அதே
(4) ரஸாக், ஓய்வு பெற்ற கடற்படை துணைஅதிகாரி A.M.M., “இந்தியப் பெருங்கடலில் கடல் பாதுகாப்பு”, BCIS மாநாடு, 25–26 ஜனவரி 2006

• • •

## இலங்கையிலுள்ள அமெரி... தொடர்ச்சி...

குறித்து அந்தந்த விமான நிறுவனங்களுடன் நேரடியாகத் தொடர்புகொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையில், இலங்கையிலுள்ள சுற்றுலாப் பயணிகள் மாற்றுப் பயணத் திட்டங்களை வகுப்பதற்கு வாய்ப்பளிக்கும் வகையில், இலங்கை அரசாங்கம் 14 நாட்களுக்கு இலவச விசா நீடிப்பை வழங்கவும் நடவடிக்கை எடுத்துள்ளது.

அவசர உதவி தேவைப்படின், அமெரிக்கத் தூதரகத்தின் அமெரிக்கப் பிரஜைகள் சேவைப் பிரிவை (+94 11 202 8500) தொடர்பு கொள்ளலாம் எனவும், திங்கள் முதல் வியாழன் வரை வேலை நாட்களில் பிற்பகல் 1.00 மணி முதல் 2.00 மணி வரை இச்சேவை வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், விமானப் பயணங்கள் தவிர்ந்த ஏனைய விடயங்களுக்கு இலங்கை சுற்றுலா துறையின் 1912 என்ற இலக்கத்தைத் தொடர்பு கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்கால பாதுகாப்பு தொடர்பான மேலதிக தகவல்களுக்கு இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் இணையதளம் மற்றும் உத்தியோகபூர்வ சமூக ஊடகக் கணக்குகளைப் பின்பற்றுமாறு மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## மெழுகுதிரியில் வாழ் ... தொடர்ச்சி...

நிலையங்களில் ஒன்றில் “எதிர்பாராத” மின் தடை ஏற்பட்டதைத் தொடர்ந்து தீவின் மூன்றில் இரண்டு பங்கு இருளில் மூழ்கியது.

கியூபாவின் தேசிய மின்சார நிறுவனம் மத்திய மாகாணமான காமகுவேயிலிருந்து மேற்கில் பினார் டெல் ரியோ வரையிலான பரந்த பகுதியையும், தலைநகர் ஹவானா வையும் மின் தடை பாதித்ததாகக் கூறியது.

சமீபத்திய ஆண்டுகளில் கியூபாவில் மின் தடைகள் அலையாக ஏற்பட்டுள்ளன, ஜனவரி முதல் முக்கிய நட்பு நாடான வெனிசுலாவிலிருந்து அமெரிக்கா எண்ணெய் தடை செய்ததால் எரிபொருள் பற்றாக்குறை அதிகரித்துள்ளது.

நாடு விமான எரிபொருள் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளது, இதனால் பல விமான நிறுவனங்கள் அங்கு சேவைகளை நிறுத்தி சர்வதேச சுற்றுலாவை மட்டுப்படுத்தியுள்ளன. புதன்கிழமை(4) ஏற்பட்ட மின் தடைக்குக் காரணம் ஹவானாவின் கிழக்கே சுமார் 100 கி.மீ (62 மைல்) தொலைவில் உள்ள அன்டோனியோ கியூடெராஸ் வெப்பமானி ஆலையில் ஏற்பட்ட ஒரு செயலிழப்புதான் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

சேவைகளை மீட்டெடுக்கும் முயற்சிகள் நடந்து வருவதாக தேசிய மின்சார நிறுவனம் தெரிவித்துள்ளது. கடந்த மூன்று மாதங்களில் கியூபாவின் மேற்குப் பகுதியை பாதிக்கும் இரண்டாவது மின் தடை இதுவாகும். எரிபொருள் பற்றாக்குறையால் உள்கட்டமைப்பு விரிசல் அதிகரித்து, பொதுப் போக்குவரத்து மற்றும் குப்பை சேகரிப்பை சீர்குலைத்த நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

மின்சாரத்தை உற்பத்தி செய்ய இறக்குமதி செய்யப்பட்ட எரிபொருளை பெரிதும் நம்பியுள்ள கியூபா, இடதுசாரி வெனிசுலா அரசாங்கம் உட்பட பிராந்தியத்தில் உள்ள அதன் நட்பு நாடுகளின் உதவியின் காரணமாக, மேற்கத்திய தடைகளை ஓரளவுக்கு முறியடித்துள்ளது. ஜனவரி தொடக்கத்தில் முன்னாள் ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ அமெரிக்கப் படைகளால் கைப்பற்றப்படுவதற்கு முன்பு, வெனிசுலா ஒரு நாளைக்கு சுமார் 35,000 பீப்பாய்கள் எண்ணெயை கியூபாவிற்கு அனுப்பியதாக நம்பப்படுகிறது, தீவின் எண்ணெய் தேவைகளில் பாதியை வழங்குகிறது.

அப்போதிருந்து, அமெரிக்கா கியூபாவிற்குச் செல்லும் பல எண்ணெய் கப்பல்களைக் கைப்பற்றியுள்ளது. ஒரு நாளைக்கு 18 மணி நேரம் வரை நீடிக்கும் மின்வெட்டு மருத்துவமனை அவசர சிகிச்சைப் பிரிவுகள், டயாலிசிஸ் நோயாளிகளை பாதித்துள்ளது.

1959 ஆம் ஆண்டு கம்யூனிஸ்ட் பிடல் காஸ்ட்ரோ அமெரிக்க ஆதரவு பெற்ற அரசாங்கத்தை தூக்கியெறிந்ததிலிருந்து அமெரிக்காவிற்கும் கியூபாவிற்கும் இடையே ஒரு விரிசல் உறவு ஏற்பட்டுள்ளது. கியூபா மீதான அமெரிக்க பொருளாதார மற்றும் வர்த்தகத் தடைகள் 1960 முதல் நடைமுறையில் உள்ளன. எரிபொருள் பற்றாக்குறையை காரணம் காட்டி மார்ச் மாத இறுதியில் இருந்து ஜூன் நடுப்பகுதி வரை ஹவானாவிற்கு சேவைகளை நிறுத்துவதாக ஏர் பிரான்ஸ் தெரிவித்துள்ளது.






## ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ... தொடர்ச்சி...

நம்மை நிலைநிறுத்திக் கொள்வது நல்லது. ஆனால் அது இன்னும் ஒரு முடிவு அல்ல நான் காத்திரமாக யோசித்துக்கொண்டிருக்கிறேன், சொல்லப்போனால். எங்கள் நிறுவனங்களுடன் இந்தப் பிரச்சினையில் பணியாற்றுமாறு நான் நிச்சயமாக அரசாங்கத்திற்கு அறிவுறுத்துவேன், ”என்று பூட்டின் ரஷ்ய பத்திரிகையாளர் பாவெல் ஜருபினிடம் கூறினார்.

ரஷ்ய வளங்களை முற்றிலுமாக வெளியேற்றுவதற்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் நோக்கத்தை மீண்டும் மீண்டும் கூறுவதால், மாஸ்கோ விநியோகங்களை “வளர்ந்து வரும் சந்தைகளுக்கு” திருப்பிவிடலாம் என்று பூட்டின் பரிந்துரைத்தார். ஐரோப்பிய ஒன்றியத்தில் எரிசக்தி நெருக்கடி “பல ஆண்டுகளாக” அந்த குழுவின் அதிகாரிகள் பின்பற்றும் “தவறான கொள்கைகளின்” விளைவாகும் என்று அவர் கூறினார்.

ஐரோப்பிய நாடுகள் உட்பட அதன் அனைத்து கூட்டாளிகளுக்கும் ரஷ்யா “எப்போதும் நம்பகமான எரிசக்தி வழங்குநராக இருந்து வருகிறது”. “நம்பகமான” கூட்டாளிகளுடன் மாஸ்கோ தொடர்ந்து பணியாற்றத் தயாராக உள்ளது என்று அவர் மேலும் கூறினார்.

“உதாரணமாக, கிழக்கு ஐரோப்பா, ஸ்லோவாக்கியா மற்றும் ஹங்கேரியில் உள்ளவர்களுடன். எண்ணெய் மற்றும் எரிவாயு இரண்டிலும் எங்கள் எரிசக்தி வளங்களை நாங்கள் அவர்களுக்கு வழங்குகிறோம், மேலும் எதிர்காலத்தில் அதைத் தொடர்ந்து செய்ய நாங்கள் விரும்புகிறோம். இந்த நாடுகளின் தலைமை இன்றைய அதே கொள்கையை, அதாவது எங்களுக்கு நம்பகமானதாக இருப்பதைப் பின்பற்றும்” என்று ஜனாதிபதி விளக்கினார்.

பூட்டினுடனான சந்திப்பைத் தொடர்ந்து, புடாபெஸ்ட் மாஸ்கோவிலிருந்து எண்ணெய் மற்றும் எரிவாயு விநியோக உத்தரவாதங்களைப் பெற்றுள்ளதாக சிஜ்ஜார்டோ தெரிவித்தார். ரஷ்யாவும் ஹங்கேரியும் எரிசக்தி வள விநியோக பாதைகளை பல்வகைப் படுத்துவதில் பணியாற்ற ஒப்புக்கொண்டுள் ளன என்று அவர் கூறினார்.

## எந்த ஒரு நாட்டுக்கும் ... தொடர்ச்சி...

உலகில் எந்தவொரு மனிதனும் எந்தக் காரணத்திற்காகவும் இறப்பதை நாம் விரும்பவில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேபோல், சர்வதேச சட்டம் மற்றும் சர்வதேச சாசனங்களின்படி இலங்கை எப்போதும் நடுநிலையாகச் செயல்படும் ஒரு நாடு என்றும் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

## ஈரானுக்கு எதிரான... தொடர்ச்சி...

அதன் அரபு அண்டை நாடுகளுக்கு இடையே சமீபத்திய ஆண்டுகளில், சமீப காலம் வரை, ஒரு நேர்மறையான இயல்பாக்க செயல்முறை நடந்து கொண்டிருந்ததால், முரண்பாடுகளை விதைப்பதே இலக்குகளில் ஒன்று என்பதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை.

“நேட்டோ இப்போது ஈரானுக்கு எதிரான போரில் ஈடுபட்டுள்ளது. உக்ரைனில் இப்படித்தான் இருந்தது, இப்போது மத்திய கிழக்கிலும் அது நடக்கிறது. உக்ரேனிய பிரச்சினைகளில் நேட்டோ நீண்ட காலமாக ஈடுபட்டுள்ளது போலவே, இப்போது அமெரிக்காவும் இஸ்ரேலும் ஈரானுக்கு எதிராகத் தொடங்கிய போரிலும் ஈடுபட்டுள்ளது என்பதற்கான அறிகுறியாகும்” என்று ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் கூறினார்.

## பேர்ல் ஹார்பரை விட ... தொடர்ச்சி...

மத்திய கிழக்கில் அமெரிக்காவின் இருப்பு இருக்காது. இதை நான் உங்களுக்கு முற்றிலும் உறுதியாகச் சொல்கிறேன்.

உலகின் மிகவும் கண்ணியமான யூதர்களில் ஒருவரான இஸ்ரேலிய பத்திரிகையாளர் அலோன் மிஸ்ராஹி அவர்கள் எழுதிய கட்டுரையின் தமிழ் வடிவம் இது.

• • •

## அமெரிக்கா ஏன் ஈரான் ... தொடர்ச்சி...

மேலும் பொருளாதார ரீதியாக முக்கியமான நடவடிக்கைகள் முழுமையாக சீர்குலைந்தவுடன், அவர்கள் ஹார்முஸ் ஜலசந்தியில் முற்றுகையை தொடருவார்கள். அதற்கு ஏற்றாற்போல முதல் முதலில் கடலில் செல்லும் தற்கொலைப் படகு மூலம் அமெரிக்காவின் எரிவாயுக் கப்பலை தாக்கியுள்ளனர். அதாவது கடல் போக்குவரத்து எதிர்வரும் வாரங்களில் பூஜ்ஜியமாகும்.

அமெரிக்காவும் இஸ்ரேலும் குறைந்த பலன்களைக் கொண்ட மிகவும் விலையுயர்ந்த தந்திரோபாயப் போரை நடத்துகின்றனர், அதே நேரத்தில் ஈரானியர்கள் ஜல சந்தியை தங்கள் கைகளில் வைத்திருக்கிறார்கள்.

அமெரிக்க அரசாங்கத்தின் மீதான தொடர்ச்சியான அரசியல் மற்றும் பொருளாதார அழுத்தம் அவர்கள் போரிலிருந்து வெளியேற முடியாத சூழ்நிலையை உருவாக்கியுள்ளது, இதுதோல்வியின் அவமானத்தால் மட்டுமல்ல, இந்த தோல்வி ஈரானுக்கு அதன் அணுவாயுதப் பாதைக்கான தடைகளை அகற்றிவிடும்.

ஐந்து நாட்கள் போருக்குப் பிறகும், ஈரான் இன்னும் அதன் அனைத்து திறன்களையும் தக்க வைத்துக் கொண்டுள்ளது, சில சீரழிந்தவை, ஆனால் அனைத்தும் செயல்பாட்டுக்கு வந்துள்ளன. ஈரான் 35-40 ஆண்டுகளாக மொபைல் ஏவுகணைகளை தயாரித்து சேமித்து வருகிறது. அவர்கள் 20 ஆண்டுகளுக்கும் மேலாக இஸ்ரேலை அடையக்கூடிய ஏவுகணைகளையும் தயாரித்து வருகின்றனர், நிலத்தடி தளங்களில் வைக்கப்பட்டுள்ளன.

காணொளிகளில், 30-40 ஏவுகணைகளுக்கு மேல் அழிக்கப்பட்டதையே பார்க்க முடிகின்றது, அதிலும் எத்தனை உண்மையானவை மற்றும் எத்தனை போலியானவை என்பது தெரியாது. அமெரிக்காவுக்கு தற்போது உள்ள தெரிவு தொடர்ந்து குண்டுகளை வீசுவதுதான், அதே நேரத்தில் நிதிச் சந்தைகள் ஈரானை விட பெரிய எதிரியாக மாறிவருகின்றன. ஈரானுக்கு முன்னர் அவை தான் இந்த போரை முடிக்கலாம்.

• • •

## ஈரான் மீது போர் ... தொடர்ச்சி...

உட்பட்டது என்ற இந்த அடிப்படையில்தான் எந்தவிதக் குற்றவுணர்வும் இல்லாமல் வெனிசுலாவின் மதுரோவையும் அவர் மனைவியையும் பிடித்துக் கொண்டுபோய் சிறையிலடைத்து விட்டு அந்நாட்டின் எண்ணெய் வளத்தை அப்படியே எடுத்துக் கொண்டார் தொனால்டு. இந்தச் செயல் கடற்கொள்ளையை விடவும் மோசமானது.

மன்றோ கொள்கை இன்று தொனால்டு துரும்பினால் உறுதி செய்யப்பட்டு விரிவாக்கப்பட்டுள்ளது. இதை இன்று 'தொன்றோ கொள்கை' எனலாம். இந்தக் கொள்கையின் மேற்கு அரைக்கோளம் மட்டுமல்ல, புவிக்கோளம் முழுவதுமே அமெரிக்க வல்லரசின் செல்வாக்கு மண்டலமாகக் கருதப்படுகிறது. துரும்ப்பின் ஆட்சியில் முழு உலகுமே வாசிங்டனின் கொல்லைப்புறமாக மதிக்கப் படுகிறது. கனடா, கிரீன்லாந்து, ஸ்பெயின் தொடங்கி பாலத்தீனம், ஈரான் வரை அமெரிக்க வல்லாதிக்கத்தின் கொலையும் கொள்ளையுமான கை கேட்பாரின்றி நீள்கிறது. ஒருதுருவ உலகம் என்ற கனவின் முதல் முக்கியப்படிதான் ஒருதுருவ மேற்காசியா அல்லது ஒருதுருவ நடுக் கிழக்கு. இந்த அமெரிக்க-இசுரேல் கனவைக் கலைப்பது போட்டி வல்லரசுகளின் கடன் மட்டுமன்று, அவற்றை விடவும் அரசுகளற்ற தேசங்களின் கடன்!

• • •

## ஈரான் போர் 100... தொடர்ச்சி...

விட இந்த நடவடிக்கை நீண்ட காலம் நீடிக்கும் என்பதை இது குறிக்கிறது. பணியாளர்கள் மற்றும் வளங்களை அவசரமாக உருவாக்குவது, “இஸ்ரேலுடன் இணைந்து தொடங்கிய போரின் பெரிய அளவிலான விளைவுகளை டிரம்பின் குழு முழுமையாக எதிர்பார்க்கவில்லை” என்பதைக் குறிக்கிறது.

இதனிடையே, அமெரிக்க-இஸ்ரேலிய பிரச்சாரத்தின் மத்தியில் ஈரானின் சுகாதார உள்கட்டமைப்பு மீது 10க்கும் மேற்பட்ட தாக்குதல்கள் நடந்ததை உலக சுகாதார நிறுவனம் உறுதிப்படுத்தியதாக கூறுகிறது, இதில் நான்கு சுகாதாரப் பணியாளர்கள் கொல்லப்பட்டனர் மற்றும் 25 பேர் காயமடைந்தனர்.

“ஈரானில் சுகாதாரப் பாதுகாப்பு மீதான 13 தாக்குதல்களையும் லெபனானில் ஒரு தாக்குதலையும் ஐ.நா உறுதிப்படுத்தியுள்ளது” என்று அதன் இயக்குநர் ஜெனரல் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் செய்தியாளர் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

அதேசமயம், மினாபில் உள்ள ஒரு பள்ளியின் மீது சனிக்கிழமை நடத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதலில் 175 பள்ளி மாணவிகள் மற்றும் ஊழியர்கள் உட்பட குறைந்தது 1,230 பேர் கொல்லப்பட்டனர். மேலும் லெபனானில் திங்கட்கிழமை முதல் இஸ்ரேலிய தாக்குதல்களில் குறைந்தது 77 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.







இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு .
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை .



# தாயகமும் வாழ்வும்







